1 - 4 - 54



ன்று ஐரோப்பாவில் தோன்றிய மதச் சீர்திருத்த இயக்கம் முழக்கமிட,
வெகுண்டெழுந்த மக்கள் மதச் சின்னங்களைத் தகர்க்கின்றனர்;
மருட்சிகொண்ட மதத்தலைவர்கள் கண்கலங்குகின்றனர்!

வெற்றிலைப்பாக்கும்
மாணவப் பருவமும்

அறிஞர் அண்ணா அவர்கள், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில், இடைநிலைவகுப்பில் பயின்றுகொண்டு இருக்கும்போது, இப்பொழுது பச்சையப்பன் கல்லூரித் தலைவராக இருக்கும் பேராசிரியர் ஆர். கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் ஆங்கிலப் பேராசிரியராக இருந்தார்.

அண்ணா அவர்களின் வகுப்பிற்கு ஷேக்ஸ்பியர் பாடத்தைக் கிருஷ்ணமூர்த்தி அய்யர்தான் கற்பித்து வந்தாராம். இடைநிலை வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும்போதே, வெற்றிலைப்பாக்கு ஓயாமல் போடுவது அண்ணாவின் பழக்கம். ஒருநாள் கிருஷ்ணமூர்த்தி அய்யர் வகுப்பு எடுத்துக்கொண்டிருக்கும்போது, அண்ணா அவர்கள் வெற்றிலைப்பாக்குப் போட்டு மென்றுகொண்டிருந்தாராம். அண்ணா அவர்கள் ஏதோ மென்றுகொண்டிருப்பதைப் பார்த்துவிட்ட பேராசிரியர், "வாயில் என்ன மென்று கொண்டிருக்கிறாய் ?" என்று ஆங்கிலத்தில் கேட்டாராம்.

அதற்கு அண்ணா அவர்கள் "வெற்றிலைப்பாக்கு!" என்று தமிழில் பதில் கூறினாராம்.

"வெளியில் போய் அதைத் துப்பிவிட்டு வா" என்றாராம் ஆசிரியர்.

"துப்பமாட்டேன்" என்றாராம் அண்ணா.

"ஏன் துப்பமாட்டாய் ?"

"இனிமேல் வேண்டுமானால் போடவில்லை. இப்பொழுது துப்பமாட்டேன். ஏனென்றால், இது காசு கொடுத்து வாங்கியது."

"நீ இப்பொழுது போய்த் துப்பிவிட்டு வராவிட்டால் உன்னை மூன்று நாட்களுக்கு என் வகுப்பில் நுழையக்கூடாத தடை விதிப்பேன்" என்றாராம் பேராசிரியர்.

"வெளியே வேண்டுமானாலும் போய்விடுகிறேன். ஆனால் வாயில் போட்டிருப்பதை மட்டும் துப்பமாட்டேன்" என்று கூறினாராம் அண்ணா.

"அப்படியானால் வெளியே போய்விடு. மூன்று நாளைக்கு வகுப்பில் நுழையக்கூடாது" என்று கட்டளையிட்டாராம் பேராசிரியர்.

அண்ணா அவர்கள் எழுந்து விறுவிறு என்று வெளியே வந்துவிட்டாராம்.

அதற்குப் பிறகு அண்ணா அவர்கள், வகுப்பில் வெற்றிலைப் பாக்கு போடுவதில்லையாம். அந்த அளவுக்கு அடங்கி நடக்க இசைந்தவர், அன்று துப்ப மறுத்ததற்குக் காரணம், போட்டுவிட்டதைத் துப்புவதில் யாருக்கும் பலனில்லை என்பதினாலேயேயாகும் என்று கூறினாராம்.

பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி ஆங்கிலத்திலேயே கேள்வி கேட்க, அண்ணா அவர்கள் ஒவ்வொன்றுக்கும் தமிழிலேயே பதிலிறுத்தாராம், வேண்டுமென்று!

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

1 - 4 - 54 வியாழக்கிழமை

புதுவையில் போர்ப்பரணி!

புதுவைத் தரணியில் போர் முழக்கம் கிளம்பிவிட்டது! விடுதலை பெற வேண்டுமென்ற வேட்கை, தாயகத்துடன் சேரவேண்டுமென்ற தணியாத ஆவல், வீறுகொண்டு எழுந்துள்ளது! சோம்பிக்கிடந்த மக்கள் கோபக் கனலுடன் பார்க்கின்றனர்! பிளவுபட்டுக் கிடந்த கட்சி வேறுபாடுகள் தணிந்துவிட்டன! ஆணவ ஆட்சிக்கு இறுதி எச்சரிக்கை அனுப்பப்பட்டுவிட்டது! ஆதிபத்தியத்தை எதிர்த்து, மக்கள் அறப்போர் துவங்கிவிட்டனர்!

இந்தியத் துணைக்கண்டத்தைவிட்டு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் விலகியபொழுதே பிரெஞ்சு ஏகாதிபத்தியமும் விலகியிருக்க வேண்டும். ஆனால் பிரிட்டிஷ் அரசியல் வாதிகளுக்கு இருந்த முன்னேக்கு—ஏகாதிபத்திய ஆட்சிமுறை ஆட்டிப்படைத்த காலம் மலையேறிவிட்டது என்று அவர்களுக்குக் கிடைத்த படிப்பினை, பிரெஞ்சு ஆட்சியாளருக்கு இன்னும் புலனாகவில்லை. அதனால், பெரும் துணைக் கண்டத்தையும், பலகோடி மக்களையும் விட்டு பிரிட்டிஷ் ஆதிபத்தியம் நீங்கியபின்னும், சில கையளவுப் பகுதிகளை வைத்துக்கொண்டு, பிரெஞ்சு ஆட்சி ஆதிக்கம் செலுத்துவதை விடாமல் இருக்கிறது. காலம் மாறிவிட்டதை அறியாமல், கீழ்த்திசை நாடுகளில் எழுந்துள்ள கொந்தளிப்பின் தன்மையை உணராமல், பதினேழாம், பதினெட்டாம், நூற்றாண்டுகளில் நடந்ததைப்போல இன்னும் ஏகாதிபத்திய வெறியுடன் அயல் நாடுகளை ஆட்டிப்படைக்கலாம் என்ற நம்பிக்கையுடனேயே பிரெஞ்சு

[illegible] சாதகமாக, பிரெஞ்சுப் பகுதிகளில் நிலவிய கட்சிவேறுபாடுகளை, உபயோகித்துப் பிரெஞ்சு அரசாங்கம் தனது ஆட்சியை இதுவரை நீடித்து வந்தது.

இன்று பிளவுபட்ட பிரிவுகளனைத்தும் ஒன்று சேர்ந்துவிட்டன, பிரெஞ்சு ஆதிபத்தியம் வெளியேறவேண்டும், பிரிந்து கிடக்கும் பகுதிகள் மீண்டும் தாயகத்துடன் சேர்க்கப்பட வேண்டும் என்பது மக்கள் மன்றங்களின் முடிவான தீர்மானமாகிவிட்டது. பொதுமக்கள், நகரமன்றங்கள், பிரெஞ்சிந்திய மந்திரிகள் இவர்களெல்லாம் இன்று இத்தீர்மானத்துக்கு பேராதரவு அளித்துள்ளனர். பிரெஞ்சு அரசாங்கத்துக்கு இதைவிட நல்ல அறிவிப்பு வேறெதுவும் இருக்கமுடியாது. தூதுப் பேச்சுகள், வாக்கெடுப்பு முறைகள் இவைகள் எதற்கும் இடமின்றி, சந்தேகமற்ற முறையில் மக்களின் மனப்போக்கு—தாயகத்துடன் இணைந்துவிடவேண்டுமென்று மக்கள் உள்ளத்தில் எழுந்துள்ள எழுச்சி வெளியிடப்பட்டுள்ளது.

மக்களின் மனப்போக்கை அறிந்து, காரிய மாற்றும் திறமையை பிரெஞ்சு ஆட்சி இழந்துவிட்டதென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. மக்கள் மன்றம் அனுப்பிய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளாததுடன், மக்களின் விடுதலையியக்கத்தை அடக்குமுறையால் அழித்துவிடவும் முற்பட்டிருக்கிறது; இந்தோ-சீனவில் தொடங்கியுள்ள போர்த்திட்டத்தை—ஏகாதிபத்திய வெறிச்செயலை, இந்தியப் பகுதியிலும் விரிவாக்க பிரெஞ்சு அரசாங்கம் முன்வந்துள்ளது.

கொதித்தெழுந்த மக்களின் ஆவேசத்தை துப்பாக்கிக் குண்டுகளோ, தடியடித் தாக்குதல்களோ, கடுந்தண்டனைகளோ, கற்சுவர் கூடங்களோ எவையும் தடுத்து நிறுத்திவிட முடியாது. புரட்சிக்கோலங்கொண்ட மக்களின் கோபப்பார்வைமுன், மதோன்மத்தர்களின் கோலாகல ஆட்சி நிலைத்ததில்லை. அந்தப் பார்வைமுன் அரண்மனைகள் பாழ்வெளிகளாக ஆகியிருக்கின்றன, ஆட்சிபீடங்கள் அசைந்திருக்கின்றன, மணிமகுடங்கள் மண்ணில் வீழ்ந்திருக்கின்றன. மக்களுடைய எழுச்சிக் குரலின் வலுவை, உலகுக்கு எடுத்துக்காட்டியது பிரெஞ்சு வரலாறேயாகும். ஆனால் இன்று அவர்களே தங்கள் நாட்டு வரலாற்றை

உணராத வகையில் இருக்கின்றனர். ...

போன் அரசபரம்பரையினர் முயன்று பார்த்து முடியாதுபோன அடக்குமுறையை, இன்று பிரெஞ்சு ஆட்சியாளர் புதுச்சேரியில் தூவிப்பார்க்கின்றனர், ஆட்சியின் எதிர்ப்பாளர்களைச் சிறையில் தள்ள முற்பட்டுள்ளனர். லூயி மன்னர்கள் கட்டிவைத்த பாஸ்டிலிச் சிறைச்சாலையைவிடப் பெரிய சிறைச்சாலை புதுச்சேரி கவர்னர் மேனாரிடம் கிடையாது. அந்தச் சிறைச்சாலையே—பாமர மக்களை பயமுறுத்திவந்த அந்தப் பயங்கரக் கோட்டையே, மக்கள் புரட்சிக்கோலம் பூண்டபொழுது, விடுதலைக்கீதம் இசைத்தபொழுது, அடக்குமுறையை எதிர்த்து அணிவகுத்தபொழுது, தகர்ந்து விழுந்தது! அந்த நிலையில், பிரெஞ்சிந்திய கவர்னர் மேனார், இப்பொழுது காரையிலும், புதுச்சேரியிலும் அறப்போர் வீரர்களைத் தடிகொண்டு தாக்கியும், சிறைச்சாலையில் தள்ளியும், விடுதலை யியக்கத்தை அடக்கிவிடவும் முயற்சிப்பதாகத் தெரிகிறது. அந்த ஆட்சியாளருக்கு, மறைந்துபோன மன்னர் பரம்பரையின் பெயரையும், இடிந்து கிடக்கும் பாஸ்டிலிச் சிறையையும், பிரெஞ்சு மக்கள் உலகுக்குத்தந்த புரட்சி வரலாற்றையும் நினைவுறுத்த நாம் விரும்புகிறோம்.

உறங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டியெழுப்புவது கடினம்; ஆனால் மக்கள் ஒருமுறை விழித்தெழுந்துவிட்டால், பின்பு அவர்களை அடக்கிவிடுவதென்பது முடியாத காரியம். இவ்வளவு காலம், பிரெஞ்சு ஆட்சி இந்தியத் திட்டுகளில் அனுமதிக்கப்பட்டதே ஆச்சரியப்படத்தக்கதாகும். இனிமேலும் அது நீடித்து இருக்கமுடியாது.

முன்பிருந்த வேறுபாடுகள் நீங்கி, அரசியல் குழப்பநிலை விலகி, பிரெஞ்சிந்தியப் பகுதிகள் இந்தியாவுடன் இணைந்துவிடவேண்டுமென்பதற்கு, இதற்குமுன் என்றுமில்லாதவாறு ஒருமித்த ஆதரவும், பலமும் திரண்டிருக்கின்றன. விடுதலையியக்கத்துக்கு ஆதரவாக நகராட்சி மன்றங்களும், பிரெஞ்சிந்திய மந்திரிசபையும் இருக்கின்றன. இவற்றையெல்லாம்விட, விடுதலைப் போராட்டத்துக்கு தேவையான ஆதரவும், எழுச்சியும் மக்கள் மன்றத்திலிருந்து கிடைத்துள்ளது.

ஆட்டிப்படைக்கும் ஏகாதிபத்திய ஆட்சியை அகற்றிவிடவும், பிரிந்து தவிக்கும் பகுதிகளைத் தாயகத்துடன் சேர்த்துவிடவும், புதுச்சேரி—காரைக்காலில் ஆரம்பித்துள்ள அறப்போரை நாம் வரவேற்கிறோம். அந்தப் போராட்டத்திற்கு நமது ஆதரவையும், பாராட்டுதலையும் முழுமனதுடன் தருகிறோம்.

பிரித்துவைக்கப்பட்டிருக்கும் பகுதிகளைத் திரும்பவும் அணைத்துக்கொள்ளும் நன்னாளை திராவிடம் எதிர்நோக்கி நிற்கிறது, தனிமையில் வாடிடும் மக்களை வரவேற்றிட தாயகம் காத்துக்கொண்டிருக்கிறது. பிரிந்து இருக்கும் பகுதிகள் என்பதற்காக பிரெஞ்சு ஆதிபத்தியம் தனது அடக்குமுறையைத் தூவி, அல்லல் கொடுக்க நினைத்தால், விடுதலை யியக்கத்துக்கு உதவியாக தாயகத்திலிருக்கும் பெருங்குடி மக்கள் தயாராக உள்ளனர். ஆனால் அத்தகைய பெரிய போராட்டத்துக்கு நாட்டையும், மக்களையும் அழைக்கும் விதத்தில் பிரெஞ்சு அரசாங்கம் விபரீதச் செயல்களில் ஈடுபடாதென நினைக்கிறோம். ஆனால், அதன் போக்கில் எத்தகைய அமளிகளை உண்டாக்கினாலும், கடைசியில் அறப்போர் வெற்றிபெறுவது உறுதி; பிரிந்த பகுதிகள் தாயகத்துடன் சேர்ந்துகொள்வதும் உறுதி.

'அறம் நமது பக்கம் இருக்கிறது, தாயகம் ஆதரவளிக்கச் சித்தமாயிருக்கிறது' என்று புதுவை, காரை மக்கள் திடமாக நம்பலாம். புதுவையில் அடக்குமுறை வீசப்பட்டால், தாயகத்தின் கோபப்பார்வை கிளம்பும், அந்தக் கனலே போதும் பிரெஞ்சு ஏகாதிபத்தியப் போக்கைச் சுட்டெரிக்க!

அறப்போரில் ஈடுபட்டுள்ள ஆண்மையாளர்களே! அஞ்சேல்! வெற்றி நமதே! என்று புதுவை காரை மக்களுக்கு உறுதி கூறுகிறோம்.

நிமிர்ந்து நில்லுங்கள்! புன்னகை தவழட்டும்! புதுவாழ்வு கிடைக்கத்தான் போகிறது!

வீரர்களே! விடுதலை பெறும் வேளை பிறந்துவிட்டது—கச்சையை வரிந்து கட்டுங்கள்! நாங்கள் நெடுந்தொலைவிலே இல்லை, மிக அருகாமையில் இருக்கிறோம்—கூப்பிடு தூரத்தில்தான் இருக்கிறோம், அஞ்சேல்! வெற்றி நமதே!

—அறிஞர் அண்ணா.

கிழக்கும், மேற்கும்

கிழக்கு வங்கத் தேர்தல் முடிவுகள் வெளி நாட்டவர்க்கெல்லாம், ஆச்சரியத்தைத் தரும் விதத்தில் இருக்கின்றன. இந்தியத் துணைக்கண்டத்தில் வேறு எவரும் நினைக்காத நேரத்தில், ஜனாப் ஜின்னா அவர்கள் தலைமையில் "பாக்கிஸ்தான்" என்ற புதிய ஒலியை முதலில் உண்டாக்கிய முஸ்லீம் லீக், ஒன்றாக இருந்த இந்தியாவில் முஸ்லீம்களுக்கு ஏகப்பிரதிநிதியாக விளங்கிய லீக், பொதுத் தேர்தலில் முஸ்லீம்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களையெல்லாம் பிடித்துக்காட்டிய லீக், இந்தியா விடுதலையடையும்போது, அது பிரிக்கப்பட்டு, "பாகிஸ்தான்" புது அரசாங்கத்தை மலரச்செய்த லீக், பாகிஸ்தானத்தில் ஆளும் கட்சியாக உள்ள லீக், இன்று கிழக்கு வங்கத் தேர்தலில் படு தோல்வி அடைந்தது. "பாகிஸ்தான்" என்ற பெயரை உலகப்படத்தில் பொறித்த கட்சிதான் அது; ஆனாலும் அதற்கு 303 பேர் இருக்கக்கூடிய கிழக்குவங்கச் சட்டசபையில், பத்து இடங்களைக்கூடப் பார்க்க முடியவில்லை. நாட்டுக்கு விடுதலை வாங்கித்தந்த கட்சி, மேலும் இப்பொழுதும் நாடாளும் கட்சி, அது சுதந்தர பாகிஸ்தானில் நடைபெறும் முதல் தேர்தலில் இருக்குமிடந் தெரியாமல் சிதறடிக்கப்பட்டு விட்டது. அங்கு முக்கியமான முஸ்லீம் லீக் தலைவர்களெனப்பட்டோர், முன்பு கிழக்குவங்க சட்டசபையில் மந்திரியாக இருந்தவர்கள் எல்லாம் ஒருவர்கூடத் தப்பாமல் தோற்கடிக்கப் பட்டுவிட்டனர். வேறு நாடுகளில் ஆளும் கட்சியின் பலம் குறைவதுண்டு, அடுத்து வரும் தேர்தல்களில் அதற்குச் சில இடங்களில் தோல்விகள் வருவதுண்டு. ஆனால் கிழக்கு வங்கத் தேர்தலில் முஸ்லீம் லீக்குக்கு ஏற்பட்டதுபோன்ற சரிவு,—சரிவு என்றால் மலையின் உச்சியிலிருந்து நேராக கண்ணுக்குத்தெரியாத மடுவின் ஆழத்துக்குத் தள்ளப்படும் சரிவு—வேறு எந்த நாட்டு அரசியலிலும் நிகழமுடியாத சம்பவமாகும்.

முஸ்லீம் லீக் எதிர்க்கட்சியினரால் தோற்கடிக்கப்பட்டது என்றதும், காங்கிரஸ் தலைவர்களும், காங்கிரஸ் பத்திரிக்கைகளும் அதிகக் குதூகலத்துடன் அந்தச் செய்தியை வரவேற்றிருக்கின்றனர். ஆனால் திருவாங்கூர்—கொச்சித் தேர்தலில் அவர்களுக்குக் கிடைத்த தோல்வியைப்பற்றி அவர்களுக்குக் கவனமெதுவும் இல்லை போலும்! கிழக்கு வங்கத் தேர்தலில் லீக் அடைந்ததைப் போன்ற படுதோல்வி அடையவில்லையென்றாலும், முஸ்லீம் லீக் பாக்கிஸ்தானத்தில் ஆளும் கட்சியாக இருந்து ஆர்ப்பரித்ததைப் போல, இங்கும் காங்கிரஸ் கட்சி ஆளும் கட்சியாக இருக்கிறது. ஆனால் திருவாங்கூர்—கொச்சின் தேர்தலில் அதை எதிர்த்து நின்ற மற்றக் கட்சிகள், காங்கிரஸை விட அதிக இடங்களைப் பிடித்துவிட்டன. இந்தியாவில் சுதந்தரக் கிளர்ச்சிக்கு வேரூன்றிய கட்சி, கிளர்ச்சிகள் பல நடத்தி, ஒத்துழையாமை, சட்டமறுப்பு போன்ற போராட்டங்களை நடத்தி மக்களை அரசியலில் ஈடுபடச் செய்த கட்சி, காந்தியாரின் தலைமையில் பணியாற்றிய கட்சி, இன்று ஆசியாவின் ஜோதியென உலகெங்கும் கூறப்படும் பண்டித நேருவைத் தலைவராகப் பெற்றிருக்கும் கட்சி, இன்று மத்திய அமைப்பிலும், மாநில அரசாங்கங்களிலும் அரசோச்சிவரும் கட்சி, அத்தகைய காங்கிரஸ், அவர்களால் உண்டாக்கப்பட்டதாகக் கூறப்படும் சுதந்திர இந்தியாவின் முதல் தேர்தலிலேயே தென்னாட்டில் தோல்விக்குமேல் தோல்வியாக அடைந்தது. இப்பொழுது கிழக்கு வங்கத் தேர்தலில் முதன் மந்திரி தோற்றார், மூன்று மந்திரிகள் தோற்றனர் என்று நாளுக்குநாள் செய்தி வருவது போல, அப்பொழுதும் முதன்மந்திரியாக விருந்த குமாரசாமி ராஜா தோற்றார், பக்கத்து மந்திரிகளாக விருந்த பக்தவத்சலம், கோபால்ரெட்டி போன்றவர்களும் தோற்றார்கள் என்ற செய்திகள் வந்தன. தோற்றுவிட்ட இடங்களை மீண்டும் பிடிக்க, திருவாங்கூர்—கொச்சியில் பலமான காங்கிரஸ் மந்திரிசபையை அமைத்திட, காங்கிரஸ் தலைவர் நேரு பண்டிதரிலிருந்து கோட்டயத்தில் சாதாரணமாக இருக்கும் தொண்டன் வரை முழுமூச்சோடும் பாடுபட்டனர், தங்களது பலம் முழு

வந்தும் அங்கே செலவிட்டனர். இருந்தாலும், தாங்கள் அடைந்த தோல்வியை மாற்றிக் கொள்ள முடியவில்லை; இழந்த செல்வாக்கை மீண்டும் பெறமுடியவில்லை.

இந்தியாவுக்குச் சுதந்தரம் வாங்கித் தந்ததாகப் பெருமைப்படுகிறது காங்கிரஸ்; ஆனால் அதற்கு திருவாங்கூர்—கொச்சின் தேர்தலில் மீண்டும் தோல்வி கிடைத்திருக்கிறது. மத்திய சர்க்காரில் ஆளும் கட்சியாக அது இருக்கிறது; அதற்கு இந்தியாவின் தென்பகுதியில் ஓரிடத்தில் தோல்விப்பட்டம் கிடைக்கிறது.

அதேபோல், 'பாகிஸ்தானம்' என்ற புதிய பெயரை உண்டாக்கி, புதிய நாட்டையே பிரித்தெடுத்த பெருமை முஸ்லீம் லீக்கிற்கு இருக்கிறது. அத்தகைய அரும்பெரும் சாதனையைச் செய்த லீக், இன்று கிழக்கு வங்கத் தேர்தலில் இருக்குமிடம் தெரியாமல் தோற்கடிக்கப்பட்டது.

முன்பு அந்தக் கட்சிகள் ஆற்றிய பணி, நடத்திய போராட்டங்கள், செய்த தியாகங்கள் இவைகளை மக்கள் மறந்துவிடவில்லை, வரலாற்றிலிருந்து அவை மறைந்துவிடவுமில்லை. இருந்தும் தேர்தல் காலத்தில், அந்தக் கட்சிகள் தோற்கடிக்கப்பட்டன. கராச்சியிலிருக்கும் முஸ்லீம் லீக் தலைவருக்குக் கிழக்கு வங்கத்திலிருந்து சோகச் செய்திகள் வருகின்றன, டில்லியிலிருக்கும் காங்கிரஸ் அதிபருக்கு தெற்கு முனையிலிருந்து தோல்விப்படலம் வாசிக்கப்படுகிறது.

முஸ்லீம் லீக் பாகிஸ்தானத்தில் முதல்தர கட்சியாக, அந்த நாடு உண்டாவதற்கே அடிப்படையாக இருந்த கட்சி; அதைத் தேர்தலுக்கு முன் அமைக்கப்பட்ட ஐக்கியமுன்னணிக் கட்சி தோற்கடித்துவிட்டது. அதேபோல் இந்திய துணைக்கண்டத்தில், அளவிலும், பெருமையிலும் பலம்பெற்று விளங்குவது காங்கிரஸ்; அதை எதிர்த்து நின்ற கட்சிகள் சாதாரண அமைப்புகள் உடையன, ஆனாலும் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டுச் சிறுபான்மைக்கட்சியாகிவிட்டது. ஆசியாவின் ஜோதி டில்லியிலிருந்து பிரகாசித்த போதிலும், திருவாங்கூரில் ஏற்பட்ட இருட்டை—தோல்வியைப் போக்க முடியவில்லை.

காரணம் என்ன? அந்த இரு கட்சிகளின் பழைய வரலாறு, தியாகம், வேலைகள், அருமை, பெருமைகள் இவற்றில் எந்தக் குறையும் கிடையாது; அவற்றை யாரும் மறுத்தும் பேசவில்லை, மறுக்கவும் முடியாது. ஆனால் மக்களுடைய நம்பிக்கையைப்பெற அந்தப் பழம் பெருமைகளை மட்டும் காட்டினால் போதாது. இப்பொழுதுள்ள நிலையில், அவைகளுடைய போக்கை வைத்துதான் மக்கள் அந்தக் கட்சிகளை மதிப்பிடுகின்றனர். ஆளவந்தார்களிடம் மக்கள் வைத்திருந்த நம்பிக்கை சிதைந்துவிட்டது. அதன் அறிகுறிதான், இந்தியாவின் தென்பகுதியிலும், பாகிஸ்தான் கிழக்குப் பகுதியிலும் ஆளும் கட்சியினருக்குக் கிடைத்துள்ள தோல்விகள்.

பதவியில் அமர்ந்ததும், தம்மை அங்கு அனுப்பிய மக்களையும் மறந்து, அவர்களுக்குத் தாங்கள் தந்த வாக்குறுதிகளையும் மறந்து, எதேச்சாதிகாரப் போக்கில் கோலாகல வாழ்வு நடத்தினால், அந்தக் கட்சிக்கு பழம் பெருமைகள் ஆயிரமிருந்தபோதிலும், மக்களின் ஆதரவையிழந்த காரணத்தால், சரியத்தொடங்கி, பின் அழிந்துவிடுகின்றன. அந்தச் சரிவின் ஆரம்பம்தான், பாகிஸ்தான் முஸ்லீம் லீக்கிற்கு கிழக்கிலிருந்தும், இந்தியாவின் காங்கிரஸ் கட்சிக்குத் தெற்கிலிருந்தும் தொடங்கியிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அடிமைப்பட்டிருந்த நிலையில், வெள்ளை ஏகாதிபத்தியத்தை வெளியேற்றும் வேலையில் எல்லாப்பகுதிகளும், தம்மிடை நிலவும் மொழி, கலாசார, இன வேறுபாடுகளை மறந்து, ஒன்றுபட்டு உழைத்தது. அந்த வேலை முடிந்ததும், விடுதலைபெற்ற ஒவ்வொரு பகுதியிலும், புதுப் பிரச்சினைகள் மக்கள் கவனத்திற்கு வந்துவிட்டன. புதிய பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாத நிலையில், பழம் பெருமைகளைமட்டும் காட்டி, ஆளும் கட்சிகளால் மக்களைத் தம்பக்கம் சேர்க்க முடியவில்லை.

முஸ்லீம் லீக்கிற்குக் கிழக்கு வங்கத் தேர்தலில் தோல்வியடைவதற்கு முக்கிய காரணமாக இருந்தது, மொழிப்பிரச்சினையாகும். கிழக்குப் பகுதியின் தாய்மொழியான வங்கமொழியை ஒதுக்கி, உருதுமொழியை முதன்மைப்படுத்த முஸ்லீம் லீக் முயன்றது. அதன் பலன்தான் கிடைத்த தோல்விகள். அதேபோல், இந்திய காங்கிரஸின் இந்தி ஏகாதிபத்தியம், அதனுடைய சரிவுக்கு முக்கிய காரணமாக அமையலாம்.

கருத்துக் கதிர்

வேலையற்ற வேலைக்கு வீண்செலவு

இந்தியத் துணைக்கண்டத்தை, வெள்ளையர்கள் ஆண்டுவந்த காலத்தில், அவர்கள், அலங்காரப்பதவிகளுக்கும், ஆடம்பர வாழ்விற்கும், அதிகார மோகத்திற்கும், ஆணவ அந்தஸ்துக்கும் மிக்க மதிப்பளித்துவந்தனர் என்ற குற்றச்சாட்டை, விடுதலைக்குப் போராடிவந்த காங்கிரஸ்காரர்கள் அத்துணைப்பேரும், வெள்ளைக்காரர்மீது சாட்டிவந்தனர். காங்கிரஸ் ஆட்சிப்பீடம் ஏறினால், தாம், அலங்காரத்துக்கும், ஆடம்பரத்துக்கும், அந்தஸ்திற்கும், ஆணவத்திற்கும் சிறிதும் இடமளிக்கமாட்டோம், அன்பு—ஆதரவு—எளிமை ஆகியவை ஆட்சிப்பீடத்தில் தவழச் செய்வோம் என்றெல்லாம் அவர்கள் வாக்குறுதியளித்தனர். காங்கிரசின் ஒப்பற்ற ஒரு பெருந்தலைவர் காந்தியார், "காங்கிரஸ் ஆட்சியில் ரூ. 500-க்குமேல் சம்பளம் பெறுவோரும் இருக்கமாட்டார்கள், ரூ. 50-க்குக் குறைந்து சம்பளம்வாங்குவோரும் இருக்கமாட்டார்கள். அதிகச் சம்பளம் ரூ. 500-ஆகவும், குறைந்த சம்பளம் ரூ. 50-ஆகவும்தான் இருக்கும்" என்று குறிப்பிட்டார். அப்படிப்பட்ட காந்தியாரைத் தலைவராகக்கொண்டு, வளர்ந்துவந்த காங்கிரஸ், இன்று, அதனுடைய முன்னைய நோக்கத்திற்கும் கூற்றுக்கும் நேர்முரணான முறையில், அலங்காரம்—ஆடம்பரம்—அந்தஸ்து ஆகியவற்றிற்கு மட்டுமே இருப்பிடமான "கவர்னர்" பதவியை வைத்துக்கொண்டு, அதனைப் பத்துலட்ச ரூபாயில் காப்பாற்றிவருகிறது.

எப்பொழுதோ சில விசேஷ அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கென்று, இந்திய அரசாங்கத்தால், அதன் ஏஜண்டாகப் பிடித்துவைக்கப்பட்ட அலங்காரப் பதுமைதான், "கவர்னர்"! அந்தப் 'பதுமை' செய்யும் வேலைகளெல்லாம், ஊர் சுற்றுவது, உல்லாசப் பொழுதுபோக்குவது, திருவிழாக்கள் கொண்டாடுவது, தோட்ட விருந்து வைப்பது, நாட்டியக்கச்சேரி காண்பது, 'ஸ்தல யாத்திரை' போவது, 'தெய்வ ஆராதனை' செய்வது போன்றவைகள்தாம். அப்படி ஒருவர் இல்லாமலேகூட ஆட்சி நன்கு நடைபெறக்கூடும். கவர்னர் பதவியின், போக்குமே அதனைத் தெளிவுபடுத்தும். 'கவர்னர்' பதவி என்னும் வேலையற்ற வேலைக்காகத், தேவையற்ற தொழிலுக்காகச் சென்னை மாநிலத்தார், ஆண்டுதோறும், ரூ 9,93,000, பொது வரிப் பணத்திலிருந்து வாரி வழங்கவேண்டியிருக்கிறது. வேலையற்ற வேலைக்குச் செலவழிக்கப்படும் வீண் செலவின்பட்டியலைப் பாரீர்! அந்தச் செலவை, இன்றைய நிலையில், இந்த நாடு தாங்குமா என்பதையும் எண்ணிப்பாரீர்!

சென்னை கவர்னரின் செலவு

அடிப்படைச் சம்பளம்	ரூ.	56,000
விருந்துப்படி	ரூ.	23,000
சிப்பந்திகள் படி	ரூ.	59,000
அரண்மனைச் சிப்பந்திகள் படி	ரூ.	2,27,000
ஒப்பந்தப்படி	ரூ.	1,50,000
சுற்றுப்பிரயாணப்படி	ரூ.	1,18,000
இஷ்டச் செலவுப்படி	ரூ.	25,000
அரண்மனை பராமரிப்புப்படி	ரூ.	3,35,000
ஆக.	ரூ.	9,93,000

ஃ ஃ ஃ

பசி ஏப்பமும் புளிச்ச ஏப்பமும் ஒன்றா?

வடநாடு—தென்னாடு என்று பேசுவதில், பொருளெதுவும் இல்லை என்று, வடநாட்டு ஆட்சிப்பீடத்தாரும், அவர்க்கு அடிமைபோன தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்களும் எவ்வளவு தான் உண்மையை மறைத்து மறைத்து, நிலைமையைத் திரித்துத் திரித்துப், பொய்யைத் திரும்பத் திரும்பக் கூறினாலும், இயற்கை—செயற்கை காரணங்கள் இந்தியாவை வடக்கு—தெற்கு என்றுதான் பாகுபடுத்திக் காட்டுகின்றனவேயொழிய, கிழக்கு—மேற்கு என்று பாகுபடுத்திக்காட்டுவதில்லை. இந்தியாவை வடக்கு—தெற்கு என்று பிரிப்பது, இயற்கை—செயற்கை காரணங்களின் இயல்பான தன்மை. ஆனால்

அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள, 'இந்திய தேசியம்' இணங்குவதில்லை.

அண்மையில் குடந்தையில் கூட்டமொன்றில், இந்திய வாணிக—தொழில் அமைச்சர், தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள், பேசும்போது, "வடநாட்டான் என்பதில் அர்த்தமே இல்லை. உட்புகுந்து பார்த்தால் தமிழ்நாட்டுக்காரர்கள்தாம் வடநாட்டில், அசாமில், கல்கத்தாவில், தேசமெங்கும் இலட்சக்கணக்கில் பரவலாக இருந்துவருகிறார்கள். வடநாட்டான், தென்னாட்டுக்காரர்கள் வந்து, வடநாட்டில் குவிந்துவிட்டதாகவே கூறுகிறான்" என்று குறிப்பிட்டுள்ளார்.

தென்னாட்டுக்காரர்கள் ஏராளமாக வடநாட்டில் போய்க்குடியேறி இருக்கிறார்கள், ஆகவே, வடநாட்டுக்காரர்கள் தென்னாட்டில் வந்து குடியேறியிருப்பதைப்பற்றி யாரும் கவலைப்படக்கூடாது என்ற கருத்தமைய தோழர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியுள்ளார். குடியேறுதல் என்ற ஒற்றுமை இருபாலாரிடத்திலும் இருப்பதை மட்டுந்தான் அவர் சுட்டிக்காட்டுகிறாரே யொழிய, இருபாலார்க்கும் உள்ள வேற்றுமையைக் காண அவர் மறுக்கிறார். தென்னாட்டுக் காரர்கள் அத்தனைப் பேரும் வேலை செய்து தொழிலாளிகளாகப் பிழைப்பு நடத்தி வருபவர்கள். ஆனால் வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வந்திருக்கும் மார்வாரி, குஜராத்தி, பட்டாணி, மூல்தானி, பனியா அத்தனைப்பேரும் சிறுமுதல்போட்டுப் பெரும் லாபம் திரட்டும் முதலாளிகளாக இருந்து வருகிறார்கள். வடநாட்டுக்காரர்கள் தென்னாட்டுக்கு வந்து திராவிடர்களின் பொருள் வளத்தைச் சுரண்டுகிறார்கள், அதே நிலையில் வடநாட்டில் இருந்துகொண்டு, வடநாட்டுக்குச் செல்லும் திராவிடர்களின் உழைப்பைச் சுரண்டுகிறார்கள். தென்னாட்டுக்காரன் வடநாட்டில் பசி ஏப்பம் விடுகிறான்; வடநாட்டுக்காரன் தென்னாட்டில் புளிச்ச ஏப்பம்விடுகிறான்! பசி ஏப்பமும் புளிச்ச ஏப்பமும் ஒன்றா?

ஃ ஃ ஃ

காங்கிரஸ் ஆட்சியில் நிர்வாகத்திறமை!

காங்கிரஸ் ஆட்சியில் நிர்வாகத்திறமையின்மையும், ஊழல்களும் எவ்வளவு மலிந்துகிடக்கின்றன என்பதற்கு, ஜீப்கார் [illegible] —துப்பாக்கி—உரம்—கம்பளி—போர்விமானம் ஆகியவை கொள்முதல் பற்றி எழுந்த ஊழல்களே போதுமான சான்று ஆகும். அவற்றோடு இப்பொழுது புதிதாக ஒரு ஊழலும் சேருகிறது. இந்தியாவின் தற்காப்பிலாகாவில் 1951—52-ம் ஆண்டில் ரூ. 3,18,00,000 கை கழுவிக் கணக்கெழுதப்பட்டு விட்டதாகக் கணக்குத் தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதில் திருட்டு, மோசடி, அக்கரையின்மை முதலிய ஒழுங்கீனங்களால் விளைந்த நஷ்டம் ரூ. 3 கோடிக்குமேலாம்; தொகை நஷ்டம் ரூ. 18 லட்சமாம். இப்படிப்பட்ட நிர்வாகத்திறமையின்மையையும், ஊழல்களையும் இந்தியத் துணைக்கண்டம் இன்னும் எத்துணை காலத்திற்குத் தாங்குமோ!

ஃ ஃ ஃ

இந்திக்கு ஆதிக்கமா?

வட இந்தியாவோடு திராவிடம் இணைந்திருப்பதால், இந்திக்கு ஏற்றம் ஏற்படுமா அல்லது திராவிட மொழிகளுக்கு ஏற்றம் ஏற்படுமா என்பதைச் சிந்திக்கச்சொல்லி, இந்திக்குத்தான் ஏற்றம் என்பதை அடிக்கடிச் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். இந்திய ஆட்சியால், இந்தியின் வளர்ச்சிதான் முக்கியமானதாகவும், முதன்மையானதாகவும் கவனிக்கப்படுமேயல்லாமல், பிற இந்திய மொழிகள், குறிப்பாகத் திராவிடமொழிகள் ஒருக்காலும் கவனிக்கப்படமாட்டா.

இந்தியாவோடு திராவிடம் இணைந்திருப்பதால், திராவிடம் கொடுக்கும் வரிப்பணத்தின் ஒரு பகுதி, இந்திமொழி வளர்ச்சிக்கு என்று செலவழிக்கப்படுகின்றதே யல்லாமல், தமிழ்—தெலுங்கு—கன்னடம் மலையாளம் முதலிய தென்னாட்டுத் திராவிட மொழிகளுக்குச் செலவழிக்கப்பட்டதே இல்லை. இந்திய அரசாங்கம் இந்திமொழி வளர்ச்சிக்கு ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஐந்து இலட்ச ரூபாயை ஒதுக்கி வைத்துள்ளது, அதுமட்டுமல்லாமல், இவ்வாண்டு வரவு—செலவு திட்டத்தில் நான்கு இலட்ச ரூபாய் இந்திமொழி வளர்ச்சிக்கென்று ஒதுக்கியுள்ளது. நமது வரிப்பணத்தில் இந்திமொழி வளம்பெறுகிறது; நமது தாய்மொழியோ அரசாங்க ஆதரவில்லாமல் வாடி வதங்குகிறது. திராவிடம் வட இந்தியாவோடு

[illegible] இந்த இரங்கத்தக்க நிலை, நீடிக்கத்தான் செய்யும்! அந்த நிலையை மாற்றுவதே நமது நீங்காக் கடமையாகும்!

ஃ ஃ ஃ

கருத்தடை இயக்கம்!

இந்தியத் துணைக்கண்டத்தில் ஏழ்மை, வறுமை, உணவுப் பற்றாக்குறை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற நெருக்கடிகள் மூளுவதற்குரிய காரணங்களில், குறிப்பிடத்தகுந்த முக்கியமான சிலவற்றுள் மக்கள் பெருக்கமும் ஒன்று ஆகும்.

உணவுப்பொருள் உற்பத்திநிலையும், தேவைப் பொருள்களின் உற்பத்தி நிலையும், வாழுமிட வசதியும் ஏறத்தாழ அப்படியே இருக்க, மக்களின் எண்ணிக்கை மட்டும் ஆண்டுதோறும் அச்சமும் அவதியும் ஊட்டும் வகையில் வளர்ந்துகொண்டே போகிறது.

1951-ம் ஆண்டில் எடுத்த மக்கள் எண்ணிக்கைக் கணக்குப்படி பார்த்தால், ஒவ்வொரு ஆயிரம்பேருக்கும் 40 குழந்தைகள் வீதம் இந்நாட்டில் பிறக்கின்றன. ஒவ்வொரு ஆயிரம் பேரிலும் ஏறக்குறைய 25 பேர் இறந்துபடுகிறார்கள். ஆண்டுக்கு ஆண்டு சராசரி ஆயிரம் பேருக்கு 15 பேர் வீதம், மக்கள் எண்ணிக்கைக் கூடுதலாகிக்கொண்டே போகிறது. இந்த அளவிலேயே பிற வசதிகளும், உணவுப்பொருள்களும் பெருகிக்கொண்டே போகின்றனவா என்று பார்த்தால், அதுதான் இல்லை! மக்கள் பெருகும் அளவுக்கு வசதிகள் பெருகுவதில்லை. எனவேதான் துன்பமும் தொல்லையும், ஏழ்மையும் வறுமையும் நாட்டில் நாளுக்குநாள் வளர்வனவாகவே இருக்கின்றன.

இந்தச் சீர்கேடு மாறவேண்டுமானால், ஒரு பக்கம் உணவு உற்பத்தியையும், வசதிகளையும் பெருக்கிக்கொண்டே போகவேண்டும்; மற்றொருபக்கம் மக்கள் பெருக்கத்தைக் குறைத்துக் கொண்டே போகவேண்டும்.

மக்கள் பெருக்கத்தைக் குறைக்கக் கருத்தடைதான் சீரிய வழியாகும். இதனைப் பொருளாதார நிபுணர்களும், அறிவியல் வல்லுநரும் இற்றைநாளில் எங்ஙனும் வற்புறுத்திவருவதைக் காணலாம். ஆனால் மதவாதிகளும், வைதிகர்களும், பிற்போக்காளர்களும், கருத்[illegible] கின்றனர். பிள்ளைகள் பிறந்து, அவைகள் ஏழ்மையிலும் வறுமையிலும், வேலையில்லாத் திண்டாட்டத்திலும், கிடந்து உழலுவது அவர்களுக்குப் "பாபமா"கத் தெரிவதில்லை; ஆனால் கருவுண்டாகாமலே தடுத்துவிடுவது மட்டும் "பாபமாகத்" தோன்றுகிறது! மதவாதிகள் 'அறிவை'விட, 'நம்பிக்கைக்கே' மிக்க மதிப்பளிப்பவர்கள். தாங்கமுடியாத அளவுக்குப் பிள்ளைகளைப் பெற்றெடுத்துவிட்டுத் தவிக்கும் மக்களின் அவதிகள் பற்றி, மதத்தலைவர்களுக்கு எப்படிக் கவலைபிறக்கமுடியும்? எனவேதான் கருத்தடை, "பாபம்" என்று வேதாந்தம் பேசித் திரிகின்றனர். குழந்தைகள் ஒன்று அல்லது இரண்டு இருந்தால் போதும், ஆனால் தமது சக்தியை மீறி, அளவுக்கு மீறிய குழந்தைகள் பிறக்கின்றன என்று கவலைப்படுவோர்க்குக், கருத்தடை முறையைக் கற்றுக்கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். பெற்றெடுப்பது ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று குழந்தைகளாக இருந்தாலும், அந்த அளவோடு திருப்தி அடைந்து, அவைகளை நன்றாகப் பேணி வளர்க்கும் பண்பு மக்கள் எல்லோரிடத்திலும் காணப்படவேண்டிய ஒன்றாகும்.

பல குழந்தைகளைப் பெற்றெடுத்துவிட்டு, அவைகளைக் காப்பாற்ற வழியில்லாமல் வாடும் குடும்பங்கள் பலவற்றைக் காண்கிறோம். தாம் குழந்தைகள் வேண்டாம் என்று விரும்பினாலும் தம் விருப்பத்தை மீறி பிறந்துகொண்டேயிருக்கின்றன என்று கவலைப்படுவோர்க்குக் கருத்தடைதானே சிறந்த துணைபுரிவதாக இருக்க முடியும்.

கருத்தடையை எளிதாகவும், நிலையாகவும், வெற்றிகரமாகவும் நிறைவேற்றிக் கொள்வதற்குச் சிறந்த முறையாக இருப்பது, ஆண்கள் மட்டுமே செய்துகொள்ளக்கூடிய 'வாசெக்டமி' என்ற ஆப்ரேஷன் முறையேயாகும். இதனால் ஆண்களுக்குக் குறையோ, நலிவோ, கஷ்டமோ, நஷ்டமோ ஏற்படாது; குழந்தை பிறக்கவேண்டாம் என்ற எண்ணம் நிறைவேறும்! இன்பவாழ்வு இனிது நடந்தேறும்! இந்த நிலையை எல்லோரும் எளிதில், செலவில்லாமல் பெறும் வண்ணம், மருத்துவச் சாலைகள் தோறும் கடைப்பிடிக்க, அரசியலார்,

டாக்டர்கள் [illegible] ஏற்படுத்த வேண்டும்.

எத்துணைக் குழந்தைகள் பெற்றெடுத்தாலும் கவலையில்லை, சமாளிக்க முடியும் என்ற உறுதிப்பாடுடையவர்கள் எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் மிகக் குழந்தைகளைச் சமாளிக்க முடியாதவர்களுக்குத் தேவையானபோது கருத்தடையை நிறைவேற்றிக்கொள்ள, இந்த ஆப்ரேஷன் முறை நல்ல துணைபுரிவதாக இருக்கும்.

கருத்தடை இயக்கத்தை நாட்டிலே நல்ல முறையில் பரப்ப அரசியலாரும், பொதுமக்களும் மிக்க அக்கரை எடுத்துக்கொண்டால், வருங்காலத்தின் நெருக்கடிகள் சிறிது குறைய வழியேற்படும்.

° ° °

பொருட்காட்சியில் ஆண்டவன்

இந்த நாட்டில் சிலைவடிவிலுள்ள 'ஆண்டவர்கள்' எல்லாம் பொருட்காட்சியில் வைத்துப், பார்த்து, மகிழவேண்டியவையாகும் என்பதை நாம் வலியுறுத்தி வருகிறோம். கண்ணுக்குக் குளிர்ச்சிதரும் சிற்பங்களெல்லாம் கண்காட்சியில் வைக்கப்படலாம்; அல்லது அன்பின் பரிசுகளாக அளிக்கப்படலாம்.

'ஆண்டவர்களை'க் கண்காட்சியில் வைக்கிறோம் என்றால், அவற்றின் சிலையழகு கண்டு வியக்கிறோம் என்று பொருள்; அவற்றின் புராணக் கதைகள், அவற்றிற்குச் செலுத்த வேண்டிய பக்தி, வணக்கம், வழிபாடு, வாழ்த்து, சுடரொளி, சாம்பிராணிப்புகை, நைவேத்தியம் எல்லாம் மறைகின்றன என்று பொருள்.

நாம் செய்ய விரும்பும் செயலைத் தஞ்சை மாவட்டத்தின் கலெக்டராயிருந்த தோழர் பழனியப்பன் முன்மாதிரியாகச் செய்து காட்டியுள்ளார். தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு கோயில்களிலும் காணப்பட்ட சில கடவுளர் சிலைகளை, தஞ்சை அரண்மனைக் கண்காட்சியில் வைத்துள்ளார். போற்றப்படவேண்டிய செயல்.

பிரிட்டிஷ் அரசி எலிசபெத் அம்மையார் இலங்கைக்கு வரும்போது, அம்மையாரிடம் நடராசர் சிலை ஒன்றைப் பரிசளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம். நமது நாட்டு ஆண்டவர்கள் இந்த வகையிலெல்லாம் பயன்படவேண்டும் என்பதுதான் நமது ஆவல்.

அதுமட்டுமல்ல, [illegible] நடராசர் சிலை ஒன்றைச் சென்னை கவர்னர் பிரகாசா, சென்னை அரசியலார் சார்பில் காசி இந்துப் பல்கலைக் கழகத்திற்கு 10-3-54-ம் நாள் பரிசாக அளித்தாராம். அதன் விலை ரூ. 50,000 பெறுமாம். இதைப்போன்ற வேறு இரண்டு நடராசர் சிலைகள் ஏற்கனவே டில்லி தேசிய இந்தியப் பொருட்காட்சி சாலைக்கு ஒன்றும், மதுரா புதைபொருள் கண்காட்சி சாலைக்கு ஒன்றும் ஆகப் பரிசாக அளிக்கப் பட்டனவாம்.

இதுபோன்றே நாட்டிலுள்ள நடராசர் சிலைகள் மட்டுமல்லாமல், வேறு பல கடவுளர்களின் சிலைகளும் கண்காட்சி சாலைகளுக்கும், பொருட்காட்சி சாலைகளுக்கும் அனுப்பிவைக்கும் செயலைச் சென்னை அரசியலார் மிகத் தீவிரமாகக் கைக்கொள்ள வேண்டும். கோயில்களையும், மடங்களையும் பொருட்காட்சிசாலைகளாக மாற்றும் பணியையும் விரைவாக அரசியலார் மேற்கொள்ளவேண்டும். மடாதிபதிகள் இப்பொழுதே நடமாடும் கண்காட்சிப்பொருள்களாகத்தான் இருந்துவருகிறார்கள்!

கோயில்கள் முழுவதும் பொருட்காட்சி சாலைகளாகவும், பொது மன்றங்களாகவும் மாறும் நாள் எந்நாளோ!

ஏப்ரல் 2-ந் தேதி வெளிவருகிறது

அரசியல்—சமுதாய—பொருளாதார—கலைத்துறை ஏடு

'முரசொலி'

[வெள்ளிதோறும்]

ஆசிரியர்: மு. கருணாநிதி

வார இதழ் விலை 2 அணா

விபரங்களுக்கு:

நிர்வாகி,
"முரசொலி"
சென்னை-24.

ஆறு மாதங்கள்!

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

"இன்னும் ஆறுமாதங்கள்தான்!" என்று டாக்டர் சொன்ன கெடு, மனோகரனின் காதில், ஒலித்தபடி இருந்தது. நோய் தரும் பயங்கரத் தீர்ப்பைப் புரிந்துகொள்ளாமல், தங்கம் தன் போக்கில், ஆடிப்பாடி எத்தகையக் கவலையு மின்றி காலங்கடத்தி வந்தாள். தனக்கு மட்டும் தெரிந்த அந்த இரகசியத்தைப் பிறரிடம் சொல்லவும் முடியாமல், தன்னால் மறக்கவும் முடியாமல், மனோகரன் வேதனைப் பட்டுக் கொண்டிருந்தான். தளிர்க்கொடிபோன்று, அசைந்துவரும் தங்கத்தைப் பார்க்கும் பொழுது, முதலில் களிப்பும், பின் சோகமும் அவன் உள்ளத்தில் பலமாக மோதின. அவளுடைய மலர் முகத்தைக் காணும்பொழுதெல்லாம், அவளுடைய சிரிப்பைக் கேட்கும்பொழுதெல்லாம், "இந்த முகம் இன்னும் மூன்று மாதங்களுக்குள் வாடிவிட வேண்டுமா?" "இந்த சிரிப்பொலி இன்னும் இரண்டு மாதங்களுக்குள் அடங்கிவிடவேண்டுமா?" என்ற கேள்விகள் எழுந்தன. தங்கத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம், வாழ்வு—அதனை மூடவருகிற சாவு இரண்டையும் மனோகரன் கண்டான். ஆனால் தங்கத்துடன் இருக்கும்பொழுது, அவன் உள்ளக் குமுறலை வெளியிடுவதில்லை, மிகவும் கஷ்டப்பட்டுச் சிரித்துப்பேசி அவளுடைய மகிழ்ச்சியை மங்கவைக்காத முறையில் நடந்துகொண்டான். ஆனால் தனிமையாக இருக்கும்பொழுதுதான், புதைத்து வைக்கப் பட்டிருக்கும் பொன் நாணயங்களை வெளியே எடுத்து யாருக்கும் தெரியாமல் எண்ணிப் பார்க்கும் கருமியைப்போல, இன்னும் எவ்வளவு நாட்கள் இருக்கின்றன வென்று கணக்கிட்டுக் கொண்டிருப்பான். அதிலும், ஒவ்வொரு தடவையும் எண்ணிப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு பொன்காசு குறைந்துகொண்டே வந்தால், கருமி எவ்வளவு வேதனைப்படுவானோ, அதைப்போல மனோகரன் கணக்கிடும்பொழுதெல்லாம் ஒருநாள், இரண்டுநாள் என்று குறைந்துகொண்டே வந்தன. ஒவ்வொரு நாளும் கழியும் பொழுதும், சாவு ஒரு நாள் மிக அருகாமையில் வந்துவிட்டதென்று அர்த்தம். நல்ல வெய்யல் பட்டு, கரைந்துபோகும் வெண்ணெயைப்பார்த்து, எதுவும் செய்யமுடியாமல் தவிக்கும் கையில் ஊமையன்போல, மனோகரன் நிலை இருந்தது. ஐந்து மாதங்களும் தாண்டிவிட்டன. இன்னும் ஒரு மாதம்—அதற்கப்புறம்—மனோகரன் நினைக்கக் கூசினான்.

ஒரு நாள் மாலை தோட்டத்தில் தனியாக அமர்ந்து, தங்கம் மாலை தொடுத்துக்கொண்டிருந்தாள். அவளைத் தேடி அங்கு சென்ற மனோகரன், அவள் கன்னத்தில் கண்ணீர் வழிவதைப் பார்த்துவிட்டான். திடுக்கிட்டவனாய், "ஏன், தங்கம், தலைவலி எடுக்கிறதா? மயக்கம் வரும்போலிருக்கிறதா?" என்று அவன் கேட்டான். மீண்டும் நோய் தலைதூக்கிவிட்டதோ என்ற பயம் அவனுக்கு வந்தது.

தங்கம் கண்களைத் துடைத்துக்கொண்டு, "ஒன்றுமில்லை, நன்றாகத்தானிருக்கிறேன்! கண்ணில் தூசி விழுந்துவிட்டது. அவ்வளவு தான்!" என்று சொன்னாள்.

"இல்லை, இல்லை! பொய் சொல்லுகிறாய்? என்ன, தங்கம்! ஏன் அழுதாய்? என்னிடம் சொல்லமாட்டாயா?" என்று மனோகரன், அவள் அருகில் அமர்ந்து, அவள் முகத்தைத் தன்பக்கம் திருப்பிக் கேட்டான்.

கையை எடுத்துவிட்டு, "நான் எப்படியிருந்தாலென்ன, நீங்கள் ஒன்றும் கவலைப்படப் போவதில்லை! அதைப்பற்றித் தெரிந்துகொண்டு பலன் எதுவும் கிடையாது. இப்பொழுதெல்லாம்....எவ்வளவு மாறிவிட்டீர்கள்? உங்களுக்கு என்மீது ஏன் கோபம் வந்தது என்று எனக்குப் புரியவில்லை. அப்படி நான் என்ன குற்றம் செய்துவிட்டேன்? உங்களுக்கு இங்கு வரப் பிடிக்கவில்லை யென்றால், நான் இங்கு வந்திருக்கவேமாட்டேன். நீங்கள் கட்டாயப்படுத்தியத

னால்தான் நான் வந்தேன்" என்று தங்கம் கூறினாள்.

மனோகரனுக்கு அவள் சொல்வதே விளங்கவில்லை. "நான் கோபமாக இருக்கிறேனா? துளிக்கூட கிடையாதே. மாறாக இங்கே வந்ததிலிருந்து அதிக மகிழ்ச்சியுடனல்லவா நாம் இருக்கிறோம்!"

தங்கத்தின் பார்வையே அவளுடைய மறுப்பைத் தெரிவித்தது. "நீங்கள் எவ்வளவுதான் தெரியாதுபோல் பேசினாலும், உங்களுடைய கோபம் எனக்குத் தெரியும். என்மீது கோபம் என்றால், உடனே சொல்லிவிட்டால், ஒரு நாள் அழுகையுடனோ, மனக்கலக்கத்துடனோ போயிருக்கும். ஆனால் இப்படி ஒன்றும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் என்னை ஏன் சித்ரவதை செய்யவேண்டும்? நான் ஏதாவது கேட்டால் பதில்கூடச் சொல்வதில்லை, சிரித்துப் பேசினால் கோபத்துடன் உறுத்துப் பார்க்கிறீர்கள், நான் கூப்பிட்டால், வேறு எங்கேயோ யோசனை செய்துகொண்டு இருக்கிறீர்கள். என் முகத்தைப் பார்க்கக்கூட உங்களுக்குப் பிடிப்பதில்லை, உடனே முகத்தைத் திருப்பிக்கொண்டு வேறு திக்கில் பார்க்கிறீர்கள். தங்கம் அவ்வளவு தாழ்வாகப் போய்விட்டாள், இறந்துபோனால் கூடக் கவலைப்படவேண்டியதில்லை!" என்று தங்கம் படபடப்புடன் பேசிவிட்டாள்.

மனோகரனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை, அவள் சொல்லியது ஒவ்வொன்றும், ஒவ்வொரு சம்மட்டியாக அவன் இதயத்தைத் தாக்கின. வேதனை தாளாமல், முகத்தைக் கையால் பொத்திக்கொண்டு மனோகரன் தலையைத்தாழ்த்திச் சாய்த்துக்கொண்டான். ஆறாத புண்ணை வேல்கொண்டு கிளறிவிடுவதுபோல, அவனுடைய மனவேதனைத் தாங்கமுடியாத கடுமையானது. ஆனால் தான்படும் மனத் துயரை—அதன் உண்மையான காரணத்தை மனோகரனால் அவளிடம் விளக்கிக் கூறமுடியாது. அவனால் எதுவும் பேசமுடியவில்லை, ஆனால் மனதில் அழுத்திவந்த துயர் கண்களில் கொப்பளித்தது. தான் சொல்லியவை துயரத்தைத்தந்ததுகண்டு, கணவனின் முகத்தைத் தாங்கி, கண்ணீரைத் துடைத்துவிட்டாள் தங்கம்.

அவர்கள் அப்படியே எவ்வளவு நேரம் பேசாமல் அமர்ந்திருந்தனர் என்று அவர்களுக்கேத் தெரியாது. மருண்டும்நாககாய் மாலையும் வழ்ந்தது, வான் தாழ்ந்தது, இருள் சூழ்ந்தது. பின் பால்வண்ண ஆடையைத் தென்றற்காற்றில் பறக்கவிட்டு, நிலா வந்தது. தாழ்ந்திருந்த— கலக்கத்தில் ஆழ்ந்திருந்த தன் காதலனின் முகத்தை நிமிர்ந்து, தங்கம் பார்த்துப் புன்னகை செய்தாள்; மனோகரனின் முகத்திலும் புன்னகை அரும்பியது. திடீரென்று இருவரும் வாய்விட்டுச் சிரித்தனர். தங்கம் எழுந்து, மர நிழல்களிடை மறைந்து, மறைந்து ஓடிவந்தாள், அவளைத் தேடி மனோகரன் வந்தான். நிலத்தில் நடமாடிவருவதுபோல அவனுக்குத் தோன்றவில்லை, நிலவு வெளியில், மிதந்திடும் வெண்மேகங்களின்மீது நடந்து, மதிமுகத்தைத் தேடிவருவதுபோல இருந்தது.

அதற்கப்புறம் தொடர்ந்த நாட்களில், மனோகரன் எல்லாவற்றையும் மறந்தான். தன் காதலியின் முகமும், கண்களுமே, அவன் உள்ளத்தில் பதிந்திருந்தன. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பொழுதும் அவனை வரவேற்றன. சாலையிலும், சோலையிலும், ஆற்றோரத்திலும், நிலவு வெளியிலும் பிரியாத இருபறவைகளென அவர்கள் சுற்றிவந்தனர். தோட்டத்தில் மலர்ந்த முல்லை, வானத்தில் மலர்ந்த நட்சத்திரங்கள், ஓடிவரும் சிற்றாறு, மரங்களிடை பாடிவரும் தென்றல் எல்லாம் அவர்களுக்காகவே ஏற்பட்டன போன்று இருந்தது. பகலும், இரவும் மாறின, காலையும், மாலையும் தொடர்ந்தன. முடிவில்லாத இனிய கீதமாக நாட்கள் சென்றன. இன்ப நாட்கள்! சுவற்றிலே மாட்டப்பட்டு, ஏட்டிலே கிழிக்கப்பட்டு, கசக்கித் தள்ளப்படும் சிறு துண்டுகளல்ல அவை, காதலர்களின் இதயத்தில் பூத்த மலர்களே அவை! அதன் இதழ்கள் வாடாது வளரும், குறையாது மிளிரும்!

மனோகரன் குறித்துவைத்திருந்த ஆறு மாதங்களும் கடந்து, மேலும் ஒரு மாதமும் ஆகிவிட்டது. அதைக் கண்டபொழுது, மனோகரனின் ஆச்சரியமும், மகிழ்ச்சியும், அளவு கடந்தன. தங்கத்தின் உடல் நலத்தில் எத்தகைய குறையும் காணப்படவில்லை. அவள் எப்பொழுதும்போல் உலவிவந்தாள். இதுவரை மனோகரன் பட்ட வேதனை, துயர் எண்ணங்கள் எல்லாம் அவசியமற்றதாகிவிட்டன. தனக்குத் தெரிந்தது தங்கத்திற்குத் தெரியாமலிருந்தது ஒருவகையில் நல்லதாகியது என மனோகரன் களிப்படைந்தான். அவள் கொண்ட நம்பிக்

வந்ததும், தங்கத்திடமும், மற்றவர்களிடமும், "நோய் பற்றிப் பயப்படுவதற்கொன்றுமில்லை; சீக்கிரத்தில் குணமாகிவிடும்!" என்றே மனோகரன் சொல்லிவைத்திருந்தான்—அவ்வாறு தந்த நம்பிக்கையே தங்கத்தைக் காப்பாற்றியிருக்கிறது. மனோகரன் கவலையை மறந்தான், காதலர்கள் முன்னைவிட அதிக உற்சாகத்துடன் நேரத்தை வெருட்டிக்கொண்டிருந்தனர்.

அணைந்துவிடும் என்று நினைத்த சுடர் முன்னிலும் அதிகப் பிரகாசத்துடன் எரிந்தது. அதைக் கண்டு மனோகரன் களிப்படைந்தான். ஆனால் அணையப்போகும் முன்னம் சுடர் பிரகாசமாக எரிவதுண்டு என்பது அவன் நினைவுக்கு வரவில்லை.

ஒரு நாள் மாலை தோட்டத்தில் உட்கார்ந்திருந்த மனோகரன், தங்கத்தைக் கூப்பிட்டான் வெளியில் கிளம்புவதற்காக. அப்பொழுது தங்கம் கிணற்றோரத்திலிருந்த மேடையில் அமர்ந்து மலர் தொடுத்துக்கொண்டிருந்தாள். "தங்கம்! தங்கம்!" என்று மறுபடியும் குரல் வந்தது. "இதோ!" என்று கூவியவண்ணம், தொடுத்த மலர்ச்சரத்துடன் தங்கம் தோட்டத்திற்குள் ஓடிவந்தாள். அவ்வாறு வரும்பொழுது, ஓரிடத்தில் அவள் திடீரென்று தயங்கி, மேற் செல்லமுடியாமல் தத்தளித்து, மயங்கி கீழே விழுந்துவிட்டாள். அவள் வருவதைப் பார்த்துக்கொண்டிருந்த மனோகரன் ஓடிவந்து அவளைத் தூக்கி உட்காரவைத்தான். பழைய நோயின் கடுமையான நிலை மீண்டும் வந்துவிட்டது!

மனோகரனும், மற்றவர்களும், தங்கத்தைத் தூக்கிப்போய், உள்ளே படுக்கவைத்தனர். டாக்டர் ஒருவர் வரவழைக்கப்பட்டார். முன்பு இருந்த நோயின் தன்மை எல்லாவற்றையும் மனோகரன் அவருக்குத் தெரியச்செய்தான். கைநாடி, இதயத்துடிப்பு முதலியவற்றையும் பார்த்துவிட்டு, மயக்கந் தெளியவைப்பதற்கு மருந்தொன்றை போட்டார், போகும்பொழுது மனோகரன் அவருடன் தொடர்ந்து வாசற்படிவரைச் சென்றான். அவன் வருகிற குறிப்பறிந்து, டாக்டர் சற்றுத் தாமதித்தார்.

"டாக்டர்! மயக்கம்...." என்று தடுமாறிக்கொண்டு மனோகரன் கேட்டான்.

"பின்."

டாக்டர் ஒன்றும் பதில் சொல்லவில்லை. மனோகரனுக்கும் கேட்கத் துணிவு வரவில்லை. பின் பெருமூச்செறிந்துவிட்டு, "இனிமேல் ஒன்றும் செய்வதற்கில்லை" என்று கூறிவிட்டு, டாக்டர் வெளியேறிவிட்டார். மனோகரனுக்கு அவர் என்ன சொன்னார், சுற்றிலும் என்ன நடக்கிறது, எங்கேயிருக்கிறோம் என்று ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. குருடன் துழவிக்கொண்டு வருவதைப்போல, வீட்டினுள் நகர்ந்துபோனான், அவன் முன்னே நீண்ட இருள் கிடந்தது. அதில் நடந்துசென்றாலும், பேசாமல் நின்றாலும் எல்லாம் ஒன்றுதான். வீட்டிலிருந்த மற்றவர்களெல்லாம் தங்கத்தின் படுக்கையைச் சுற்றி, அழுது புலம்பிக்கொண்டிருந்தனர். மனோகரனால் அழுதுவிட முடியவில்லை. அவனது நினைவும், உணர்ச்சிகளும் மரத்துவிட்டன. மெதுவாகப் படிகளையும், வாசலையும் தாண்டி, தங்கம் படுத்திருக்கும் அறையை வந்தடைந்தான். அங்கே, தரையிலிருந்து பிடுங்கப்பட்டு, துவங்கிக்கிடக்கும் கொடிபோல, தங்கம் படுக்கையில் துவண்டு கிடந்தாள்.

இரவு நீண்ட நேரங்கழித்துதான், மயக்கந் தெளிந்து தங்கம் கண்ணைத் திறந்தாள். கூடியிருந்தவர்களெல்லாம், பரபரப்படைந்து எழுந்து நின்றனர். மனோகரன் அவள் அருகில் போய் உட்கார்ந்தான். உறக்கத்திலிருந்து விழித்தெழுவதைப்போன்று, தங்கம் எல்லோரையும் பார்த்து, புன்னகை செய்தாள்.

கம்மிய குரலைச் சரிசெய்துகொண்டு, "எப்படியிருக்கிறது? ஏதாவது வேண்டுமா?" என்று மனோகரன் கேட்டான்.

"நன்றாகத்தானிருக்கிறேன், ஆனால், செத்துக்கொண்டிருக்கிறேன்?" என்று தங்கம் மூச்சுத் தடுமாறி சொன்னாள்.

"அப்படிச் சொல்லாதே தங்கம்!" என்று அவள் நெற்றியைத் தடவிக்கொடுத்தான் மனோகரன்.

"இப்பொழுதென்ன, ஆறு மாதங்களாகவே நான் மெதுவாக இறந்துகொண்டு தான் வந்திருக்கிறேன்."

“ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?” என்று [illegible] பதைப்புடன் மனோகரன் கேட்டான்.

தங்கம் சிரித்துக்கொண்டு, சற்று நகர்ந்து, சாய்ந்து உட்கார்ந்தாள். “உங்களிடம் இவ்வளவு நாளும் சொல்லாமல் ஒன்றை மறைத்து வந்தேன். அது தெரிந்திருந்தால் நீங்களெல்லாம் கலக்கமடைந்திருப்பீர்கள். கடைசியாக ஒரு பெரிய டாக்டரைப் பார்த்தோமல்லவா? அவர் கடைசி நாள் என்னைப் பார்த்துவிட்டு, வெளியில் வந்து தன் உதவி டாக்டருடன் பேசிக்கொண்டிருந்தார். அரைத் தூக்கத்திலிருந்த நான், என் பெயர் பேசப்படுவதைக் கேட்டு நிமிர்ந்து உட்கார்ந்தேன். என்னுடைய நோயின் நிலையைப்பற்றிச் சொல்லும்பொழுது, பெரிய டாக்டர், ‘இன்னும் ஆறுமாதத்திற்கு மேல் தாங்காது’ என்று சொன்னது என் காதில் விழுந்தது. முதலில் விலக்கமுடியாத மனவதிர்ச்சியையும், கலக்கத்தையும் கொடுத்தது, பின் அதை ஒப்புக்கொள்வதைத் தவிர, வேறு வழியில்லை யென்று பட்டது. அதை நான் மற்றவர்கள் யாரிடமும் இதுவரை சொன்னதில்லை; சொன்னால் ஆகப்போவது ஒன்றுமில்லை, அதனால் அவர்களுக்கும் மனக் கலக்கம் உண்டாகும்” என்று கூறிக் களைப்படைந்து, தங்கம் சற்று நிறுத்தினாள்.

மனோகரனின் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது. “அது தெரிந்திருந்தும், இவ் [illegible] கொண்டு எப்படி யிருக்க முடிந்தது.”

“சாவு வருவதற்குமுன்னமே செத்துப் போவதைவிட சாவு வரும்பொழுது செத்துப் போவது நல்லதல்லவா?”

“ஐயோ! இல்லை, நீ சாகமாட்டாய், சாகமாட்டாய்!” என்று மனோகரன் சதறினான்.

தங்கம், அவன் கையைப் பற்றி அணைத்துக் கொண்டு, “டாக்டர் சொன்னதைவிட, இரண்டுமாதங்கள் கூடுதலாகவே நான் வாழ்ந்து விட்டேனே, அது போதாதா?” என்று சிரித்துக்கொண்டாள்.

பின் சிறிது நேரத்திற்கெல்லாம் தங்கத்தின் நினைவு தடுமாறியது. இரவு பூராவும் அவளுடைய பேச்சு எங்கெங்கோ அலைந்துகொண்டிருந்த . தோட்டத்தைப் பற்றியும், ஆற்றோரம்பற்றியும், மலர்களைப்பற்றியும், மகிழ்நிலா பற்றியும் ஏதேதோ பிதற்றிக்கொண்டிருந்தாள்.

கீழ்த்திசையில் வெண்மையொளி தூவிடும் விடியற்காலையில், அவளுடைய பேச்சும், மூச்சும் அடங்கிவிட்டன. அப்பொழுதும், அவளுடைய முகத்தில் அரும்பிய புன்னகை மறையாதிருந்தது!

(முற்றிற்று)

மும்மூர்த்திகளின் சந்திப்பிலே

ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சர்ச்சில் மூவரும் முன்பு ஒருமுறை சந்தித்ததைப் பற்றி, ஒரு கற்பனைக் கதை உண்டு. அதாவது, அம்மூவர்க்கும் இடையில் கீழ்க் கண்டவாறு உரையாடல் நடைபெற்றதாம்.

ரூஸ்வெல்ட்: நேற்றிரவு நான் ஒரு கனவு கண்டேன். போர் முடிந்துவிட்டது. ஐக்கிய நாடுகள் சங்கத்தின் தலைவனாக என்னை நியமித்துவிட்டார்கள். இதுவே என் கனவு.

சர்ச்சில்: நானும் ஒரு கனவு கண்டேன். போர் முடிந்துவிட்டது. ஐக்கிய நாடுகளின் முதன் மந்திரியாக என்னை நியமித்துவிட்டார்கள். இதுதான் என் கனவு.

ஸ்டாலின்: நான் நேற்றுக் கனவு காணவும் இல்லை. நான் எவரையும் எந்தப் பதவிக்கும் நியமித்ததாகவும் நினைவில்லை.

அதிசயம்பற்றிய மூடநம்பிக்கை

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

பேய்—பூதம்—பிசாசு ஆகியவற்றிலே மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை, மாந்திரீகம் என்னும் வேறோர் நம்பிக்கைக்கு, அடிப்படையாக அமைந்திருந்தது.

பூதத்திற்கு 'ஆன்மா' ஒன்றைக் காவு கொடுத்தால், அது, அதற்குப் பதிலாகச் சில பல நன்மைகளைப் புரியும் என்று நம்பப்பட்டது. வயதுமுதிர்ந்த கிழவன், தன் 'ஆன்மா'வைப் பூதத்திற்கு ஒப்படைத்து அதன் பாதுகாப்பில் நிறுத்திவைத்தால், அவனது கூனி-உடைந்த முதுகு நிமிர்ந்து நேராகும், கிழத்தன்மை இளமையாக மாறும், வெள்ளிய மயிர் பழுப்பு நிறம் கொள்ளும், நலிந்த இதயம் துடிக்கும் குழந்தை இதயமாக மாறும் என்றெல்லாம் நம்பப்பட்டன. மந்திரம் ஓதுவதாலும், செபம் செய்வதாலும் கெட்ட பண்புடையவன் பழிக்குபழி தீர்த்துக்கொள்ள முடியும், ஏழை பணக்காரன் ஆகமுடியும், பேராசை பிடித்தவன் பெரிய பதவிக்கும்—அதிகாரத்திற்கும் உயரமுடியும் என்றெல்லாம் நம்பப்பட்டன. இப்படிப்பட்ட வாழ்க்கையில், ஏற்படும் எல்லா நன்மைகளையும், பூதமே முன்னின்று செய்வதாகக் கருதப்பட்டது. கெட்ட பூதம் ஒன்றின் ஆசைகளுக்குக் கட்டுப்படாமல் நிற்கக் கற்றுக்கொண்டவர்களுக்கு மோட்ச உலகத்தில் நன்மைகள் காத்துக்கொண்டு இருக்கும் என்றும், ஆனால் ஆசைகளுக்குக் கட்டுப்பட்டவர்களுக்குப் பூதம் இவ்வுலகிலேயே நன்மை புரியும் என்றும் பலரும் நம்பினர். மாந்திரீகத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார்கள், பூதத்தோடு தொடர்பு கொண்டிருந்தார்கள் என்ற காரணத்திற்காக, அத்தகையோர்க்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எந்தக் கற்பனையாளராலும்கூட தீட்டிக்காட்ட முடியாது. பல நல்லவர்கள்கூட பூதத்தோடு தொடர்பு கொண்டவர்கள் என்ற குற்றஞ்சாட்டப்பட்டுக் கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டனர். அப்படிப்பட்ட காரணங்களால், அழிக்கப்பட்ட குடும்பங்கள், சிறையிலடைக்கப்பட்ட தாய் தந்தைமார்கள், சித்ரவதை செய்யப்பட்ட பெரியவர்கள், எரிக்கப்பட்ட சிலர்கள், அவிக்கப்பட்ட அடுப்புகள், கொல்லப்பட்ட குழந்தைகள், கைகால் முறித்திடும் பலகையில் கட்டப்பட்டுப், பிய்க்கப்பட்ட, சிதைக்கப்பட்ட வயதானவர்கள்—ஏழைகள் — உதவியற்றோர் எத்துணை ஆயிரம் எத்துணை ஆயிரம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் !

மூடநம்பிக்கையும் அச்சமும் ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொருவர் உள்ளத்திலும் குடியிருந்த நாட்களைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பாருங்கள் ! குற்றஞ்சாட்டிய நல்லவர்களையே குற்றவாளிகளாகக் கருதப்பட்ட நாட்களையும், அறியாமையை வெளிப்படுத்துவதையே குற்றத்தை ஒப்புக்கொள்வதாகும் என்று கருதப்பட்ட நாட்களையும், கிருத்தவ உலகம் முழுவதும் மதிகலங்கியிருந்த நாட்களையும் சிறிது சிந்தித்துப் பாருங்கள் !

இந்தக் கொடுமைகளெல்லாம் மூட நம்பிக்கையின் விளைவுகள் என்பதை நாம் இப்பொழுது நன்கு அறிகிறோம். மக்கள் நுகர்ந்து வந்த வேதனைகளுக்கெல்லாம், அறியாமையே தாயாகும் என்பதை நாம் இப்பொழுது அறிகிறோம். மந்திர சாதனை என்பது ஒரு காலத்திலும் நிகழ்ந்ததில்லை என்பதையும், பூதத்தால் மக்கள் நன்மையேதும் அடைந்ததில்லை என்பதையும் நாம் இப்பொழுது அறிகிறோம் ; ஆனால் நமது காட்டுமிராண்டித் தன்மையிலிருந்த பக்தியுள்ள முன்னோர்கள் அதுபற்றித் தவறாகவே எண்ணிவந்திருக்கின்றனர்.

நமது முன்னோர்கள் அதிசய வித்தைகளிலும், அதிசய நிகழ்ச்சிகளிலும், அடையாளங்

களிலும், கிரகணங்களிலும், வால்நட்சத்திரங்களிலும், எலும்புகளின் மகிமையிலும், பேய்—பூதம்—பிசாசுகளின் ஆற்றல்களிலும் முழு நம்பிக்கை கொண்டிருந்தனர். இவையெல்லாம் அதிசயப் பொருள்களாகவும், அதிசய நிகழ்ச்சிகளாகவுமே கருதப்பட்டன. இந்த உலகமானது மந்திரவித்தையால் நிரம்பப் பெற்றதாகவே கொள்ளப்பட்டது; பேய்—பூதம்—பிசாசுகளெல்லாம் ஜாலவித்தை நிகழ்த்துவோராக அதாவது ஜாலவித்தைக்காரர்களாகக் கருதப்பட்டன. நிகழ்ச்சிகளுக்குஅடிப்படையாக இயற்கையான காரணங்கள் உண்டு என்பதை முன்னோர்கள் உணரவில்லை. ஒரு பூதம் ஒன்றை விரும்பும்; அது உடனே நிகழும். சாத்தானுக்குத் தன் 'ஆன்மா'வை ஒப்படைத்தவுன், கைகால்களை ஆட்டுவான், சில புரியாத சொற்களைக் கூறுவான், அவ்வளவுதான், உடனே அவன் எதிர்பார்ப்பது நிகழும்! இதில் இயற்கையான காரணங்கள் இருப்பதாக நம்பப்பட்டதில்லை. ஏமாற்றமும் மதிமயக்கமும், பயங்கரமும் அதிசயமும் இவ்வுலகை ஆண்டுவந்தன. இவற்றிற்கெல்லாம் இருந்த அடிப்படை இப்பொழுது தகர்த்தெறியப்பட்டுவிட்டது; பகுத்தறிவு அவைகளைத் துரத்தியடித்துவிட்டது. அறியாத்தன்மை, பொய்களுக்கு, நாக்குகளையும் இறக்கைகளையும் கொடுத்தது; அவைகள் பறந்தன; அப்பொழுது ஊமையாகவும் நொண்டியாகவும் இருந்த உண்மைகள் பின்னால் விடப்பட்டன; அவைகள் அலட்சியப்படுத்தப்பட்டு, வெளிப்படுத்தப்படாமல் பின்தங்கினவாயின.

அதிசயம் என்றால் என்ன? இயற்கையின் ஆண்டையான ஆண்டவன், இயற்கையின் உண்மைகளுக்குத் தொடர்பில்லாதவகையில், ஒன்றினைச் செய்துகாட்டுவது. இதுதான், அதிசயம் என்பதற்கு நாணயமாகச் சொல்லக்கூடிய பொருளாக இருக்கமுடியும்.

ஒரு மனிதன் முழுவட்டம் ஒன்று வரைந்து, அதன் விட்டம், வட்டத்தின் சுற்றளவில் சரிபாதியாகும் என்று கூறுவானேயானால், அது பூகணிதத்தில் அதிசயமாகக் கருதப்படும். ஒரு மனிதன் நான்கு என்ற எண்ணை இரண்டு தடவையாகக் கூட்டி ஒன்பது வருகிறது என்று காட்டுவானேயானால், அது கணிதத்தில் அதிசயமாகக் கொள்ளப்படும். ஒரு மனிதன் கல் ஒன்றை ஆகாயத்தில் தூக்கி எறிந்து, அது விழும்பொழுது முதல் நொடியில் பத்து அடி தாண்டி, இரண்டாவது நொடியில் இருபத்தைந்து அடி தாண்டி, மூன்றாவது நொடியில் ஐந்து அடி தாண்டுமேயானால், அது இயற்கைப் பொருளியலில் அதிசயமாகக் கருதப்படும். ஒரு மனிதன் உயிர்க்காற்று, நீர்க்காற்று, உப்புக்காற்று மூன்றையும் கலந்து, தங்கத்தைச் செய்துகாட்டுவானேயானால், அது கலவையியலில் அதிசயமாக ஏற்கப்படும். ஒரு மதபோதகன் தன் மதக் கொள்கையொன்றை நிரூபித்துக் காட்டுவானேயானால், அது மதயியலில் அதிசயமாக மேற்கொள்ளப்படும். அரசியல் கட்சி ஒன்று ஐம்பது சத வெள்ளிப்பணத்தை ஒரு டாலரின் மதிப்புக்கு உயர்த்திக் காட்டுவானேயானால், அது பொருளியலில் அதிசயமாக எண்ணப்படும். ஒரு சதுரத்தை அப்படியே முக்கோணமாக ஆக்கிக்காட்டுவது சிறந்த அதிசயமாகக் கருதப்படும். ஒரு நிலைக்கண்ணாடி, தனக்கு முன்னால் நிற்பவர்களைக் காட்டாமல், தனக்குப் பின்புறமாய் நிற்பவர்களைக் காட்டுமேயானால், அதுவே ஒரு பெரிய அதிசயமாக நினைக்கப்படும். ஒரு கேள்வி கேட்டு, அதன் எதிரொலி அந்தக் கேள்விக்கான விடையாக வருமேயானால், அது அதிசயங்களில் ஒன்றாகப் போற்றப்படும். சுருங்கச் சொல்லுவதானால், இயற்கையின் உண்மைகளுக்கு மாறாகவோ அல்லது, இயற்கையின் உண்மைகளை அலட்சியப்படுத்தியோ செய்து காட்டப்படும் எந்த ஒரு செயலும் அதிசயத்தின்பாற்படும்!

இப்பொழுது, நாம், "இயற்கையின் ஒருமித்த நியதி" என்று சொல்லப்படுவதொரு கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளோம். அதனதன் இயற்கைப் பண்புகளுக்கேற்ப ஒவ்வொருபொருளும் நடக்கின்றது அல்லது நடத்துவிக்கப்படுகின்றது என்பதை நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஒரேவிதமான சூழ்நிலையில், முடிவுகளெல்லாம் ஏறத்தாழ ஒரேவிதமாகவே அமைந்திருக்கும் என்பதை நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஒரேவிதமான பொருள்கள் ஒரேவிதமான பண்புகளைக் கொண்டிருக்கின்றன; ஒரேவிதமான பொருள்கள் ஒரேவிதமான பொருள்களையே உற்பத்திசெய்யும் என்பதையும் நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். எனவே, இப்பொழுது, நிகழ்ச்சிகளுக்கு இயற்கையான பெற்றோர்கள் உண்டு என்பதையும், அவைகள் எவையும் குழந்தையில்லாமல் செத்துப்

காட்டிக்கொடுத்த முல்லை

[எழிலி]

அவ் இளையோள் காதல் மணங்கமழ, நடமாடும் பூவாகப் பொலிவுற்றுத் திகழ்கிறாள். அவ் இளைஞன் காதல் மணம்விரும்பி, இன்பத் தேன் பருக, வண்டெனச் சுற்றிவருகிறான். இருவரும் ஒருவரை யொருவர் காண்கிறார்கள்; காதல் கொள்கிறார்கள்; கலந்து பேசுகிறார்கள்; களவொழுக்கத்தில் ஈடுபடுகிறார்கள்.

ஊரார் அறியாமல், உற்றார்க்குத் தெரியாமல் களவொழுக்கம் நடைபெறுகிறது. நாட்கள் பல கழிகின்றன. தலைவன் தலைவியர்க்கிடையே அன்பும் ஆதரவும் வளர்கின்றன.

தலைவி, ஒருநாள் இரவுநேரத்தில் தலைவனைக் தனியே கண்டு, பேசி மகிழ்ந்திருந்துவிட்டு, வீடு திரும்புகிறாள். தலைவனோடு மகிழ்ந்து விளையாடியபொழுது, அவன் அன்பின் காரணமாக அவள் கூந்தலிலே சொருகிய முல்லை மலர்களையும், முல்லை மலர்களால் தொடுத்த மாலையையும், எடுத்துவிட்டு வீடுதிரும்ப, மறந்துவிடுகிறாள். யாரும் அறியாவண்ணம், மெல்ல வீட்டினுள் நுழைந்து, தன் படுக்கையில் படுத்து, ஏதும் அறியாதாள்போல உறங்கி விடுகிறாள்.

மறுநாள் காலை. தலைவிக்கு வெண்ணெய் தேய்த்து முழுக்காட்டுவதற்காக, வளர்ப்புத் தாய், தலைவியை எழுப்பி அழைத்துக்கொண்டு முற்றத்திற்குச் செல்கிறாள். தலைவியின் தாயும் தந்தையும் முற்றத்தின் குறட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். வீட்டிலுள்ள ஏவலாளரும் பிறரும் அங்குமிங்குமாக நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். வளர்ப்புத்தாய் பெண்ணை உட்காரவைத்து, அவளது தலைமயிர்க்கொண்டையை அவிழ்க்கிறாள். அவிழ்த்தவுடன் தலைமயிரிலிருந்து முல்லை மலர்களும், முல்லை மாலையும் தொப்பென்று கீழே வந்து விழுகின்றன. முல்லைப் பூக்களோடு, ஆண்கள் அணிந்து கொள்ளும் தன்மை வாய்ந்த முல்லைமாலை தலைவியின் கூந்தலிலிருந்து விழுவதைக்கண்ட செவிலித்தாய், நற்றாய், தந்தை ஆகியோர் திடுக்கிட்டுப்போய்விடுகின்றனர். ஆண்கள் அணியும் முல்லைமாலை, அருமை மகளின் கூந்தலுக்குவரக் காரணம் என்னவென்று எண்ணித்திகைக்கின்றனர். முல்லைமாலை தலையிலிருந்து கீழே விழுவதைக் கண்டவுடன் தலைவி அச்சத்தால் பீடிக்கப்பட்டு, நடுநடுங்கி, மெய் விதிர்த்துப் போகிறாள். பெண்ணின் முகத்திலும், உடலிலும் அச்சம் காரணமாக மாறுதல் ஏற்படுவதைப் பார்த்த நற்றாய், ஏதோ வொரு ஆடவனோடு தொடர்பு வைத்திருக்

போகா என்பதையும் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

'அதிசயக்காட்சிகள்' அனைத்தும் நடைமுறைக்கு மாறானவை என்பது மட்டுமல்லாமல், அவையெல்லாம் எந்த நல்ல சிந்தனையாளனாலும் சிந்திக்கப்படமுடியாதவையுமாகும்.

இப்பொழுது, நல்லறிவுபடைத்த எவனும், அதிசயக் காட்சியொன்று நடத்திக் காட்டப்பட்டது என்பதையோ, இனி நடத்திக் காட்டப்படும் என்பதையோ ஏற்றுக்கொள்ள மாட்டான்.

அதிசயக் காட்சிகள்பற்றிய நம்பிக்கை, அறியாமை என்னும் நிலத்தில்தான், வளருகிறது!

கிறாள் தன்மகள், அதனால்தான் அவள் கூந்தலிலே ஆடவனின் தோளில் புரளும் மாலை ஏறியிருக்கிறது என்பதை அறிந்துகொண்டு, ஓவென அலறிக், கையைப் பிசைந்துகொண்டு, ஏதுசெய்வதென அறியாமல் கொல்லைப்புறம் நோக்கி ஓடுகிறாள். தந்தை அசைவற்று நிற்கிறார். செவிலித்தாய், தன் வளர்ப்புமகள், தான் அறியாமல் களவொழுக்கம் நடத்திவந்திருக்கிறாளே என்று ஏங்கி உட்கார்ந்துவிடுகிறாள்.

மயிர்ச்சந்தனம் பூசி உலர்த்தின தலைமயிர் மணங்கமழ, அவிழ்ந்துகிடக்கும் நிலையில் தலைவி ஏது செய்வது என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருக்கிறாள். தனது களவு வெளிப்பட்டுவிட்டதே என்று எண்ணி வெட்கப்படுகிறாள். தன் தாய், தன் எதிரிலே நிற்கமாட்டாமல் கொல்லைப்புறம் சென்றுவிட்டதை உணர்ந்து, தான் இனிமேலும் அங்கு தங்கியிருப்பது முறையல்ல, அது நாணத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் வழியாகாது என்று கருதி, வெளியே எங்கேயாவது சென்றுவிடலாமா என்று எண்ணுகிறாள். ஊருக்கு அருகே புதர்கள் அடர்ந்த காடு ஒன்று இருப்பது அவள் நினைவிற்கு வருகிறது. உடனே அவிழ்ந்துகிடக்கும் கூந்தலை வாரி முடித்துக்கொண்டு வெளியேறுகிறாள். அச்சம் அவளது கால்களைத் தடுத்து நடக்கவொட்டாமற்செய்கிறது. பூவேலைப்பாடுகள் நிறைந்த, அழகிய கரை அமைந்த, நீல நிறமுடைய அவளது புடவை, தரைதோயத் தாழ்ந்து கிடக்கிறது. அதுவேறு அவள் கால்களைத் தடுத்து விரைவாக நடக்கவொட்டாமற் செய்கிறது. அதனால், தாழ்ந்து கிடக்கும் புடவையைச் சிறிதேறக் கையாலே தழுவிக்கொண்டு, அச்சம் துரத்த, கால்கள் தயங்கத், தள்ளாடித் தள்ளாடி நடந்துசென்று, காட்டிற்குள் மறைந்துவிடுகிறாள்.

ஏக்கத்தாலே பீடிக்கப்பட்ட தாய் தந்தையர், மகள் எங்கே போகிறாள் என்பதைக் கவனிக்க மறந்துவிடுகின்றனர். சிறிதுநேரங் கழித்து மகளைக் காணாமல் தவிக்கின்றனர்; அங்குமிங்கும் ஓடி அலைந்து தேடிப் பார்க்கின்றனர். அக்கம்பக்கத்தில் மகளைக் காணமுடியவில்லை அதற்குள் மகளின் தோழி வருகிறாள். தோழி, பரபரப்புக்கு என்ன காரணம் என்று வினவுகிறாள். நடந்ததைக் கூறி, தலைவி எங்கோ போய்விட்டாள் என்பதைத் தெரிவித்துக் கலங்குகிறாள் செவிலித்தாய். தாம் போய்க் கண்டுபிடித்து அழைத்துக்கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுத் தோழி புறப்படுகிறாள்.

தலைவி எங்கே போயிருக்கக்கூடும் என்று தோழி சிறிது நேரம் சிந்தனை செய்துபார்க்கிறாள். தாம் அடிக்கடி சென்று விளையாடும் புதர்க்காட்டின்பக்கம் சென்றிருக்கக்கூடும் என்ற முடிவுக்கு வந்து, அக்காடு நோக்கிச் செல்கிறாள் தோழி.

காட்டில், ஒரு மரத்தடியில், அச்சம் கலக்கம், திகைப்பு திகில், எல்லாம் ஒன்றுசேர,மிக்க மனவாட்டத்தோடு தலைவி உட்கார்ந்திருக்கிறாள். தொலைவில் யாரோ வருவதைப் பார்த்து மேலும் அச்சங்கொள்கிறாள். தோற்றம் தன்னை நோக்கி நெருங்க நெருங்கத், தன் தோழி வருகிறாள் என்பதைக் கண்டுகொள்கிறாள்.

"ஏடி! உன்னை எங்கெங்கே தேடுவது! ஏன் இங்குவந்து உட்கார்ந்திருக்கிறாய்?" என்று தோழி தலைவியின் அருகில்வந்து வினவுகிறாள்.

"எல்லாம்தான் உனக்குத் தெரிந்திருக்குமே! ஏன் என்று, என்னை ஏன் கேட்கிறாய்?" என்று தலைவி விடையிறுக்கிறாள்.

"எனக்கு எல்லாம் எப்படியடி தெரியும்! உன்னைப்பற்றிய செய்தி காதில் பட்டதும் படாததுமாக, உன்னைப் பார்க்க நான்தான் ஓடோடி வந்துவிட்டேனடீ!" என்று தோழி கூறுகிறாள்.

"எல்லாவற்றையும்தாம், தாய் உன்னிடம் கூறியிருப்பாளே!" என்று தலைவி சொல்லுகிறாள்.

"எனக்கு விளக்கமாக ஒன்றும் தெரியவில்லை! என்னடீ நடந்தது? நடந்ததை அப்படியே சொல்லடி!" என்று தோழி வினவுகிறாள்.

"உனக்குத்தான் தெரியுமேடீ! அந்த ஆணழகன் ஆட்டிடையனை நேற்று இரவு தோட்டத்தருகில் கண்டு, பேசியிருந்தேன். அவன் தன் தோளிலே சூடியிருந்த முல்லை மாலையை என் கூந்தலிலே சொருகி அழகு பார்த்திருந்தான். நான் வீடு திரும்பும்போது,

அதனை எடுத்துவிட்டுச் செல்ல மறந்துவிட்டேன்.''

''ஏண்டி, மறந்தாய்?''

''நான் என்னடி செய்வேன்! காலம் கழிந்து விட்டது. விரைவாக வீடு போய்ச்சேரவேண்டி ஏற்பட்டுவிட்டது. அந்த விரைவில் மறந்து விட்டேன்!''

''அப்புறம், என்ன நடந்தது?''

''காலையில் செவிலித்தாய் என்னை எழுப்பி, வெண்ணெய் தேய்க்க அழைத்துச் சென்றாள். முற்றத்திலே என்னை உட்காரவைத்து, கூந்தலை அவிழ்த்தாள். கூந்தலிலிருந்து, அவன் சூட்டிய முல்லை மாலை தொப்பென்று, தாயும் தந்தையும் பார்க்கும் விதத்தில், முன்னே விழுந்தது!''

''அப்பொழுது நீ என்னடி செய்தாய்?''

''நான் என்னடி செய்வேன்! பிறர் காணாத பொழுது கள்ளைச் சாப்பிட்டு, அது, பிறகு உடலிடத்தே ஆட்டத்தைக் கொடுக்கவும், அதன் பின்னர் வெட்கத்தை மறந்து, பிறர் நடுங்கும்படி, தாம் கள்ளுண்ட செய்தியைச் சிலர் வெளியிட்டுரைத்துவிடுவதுபோல், நான் மறைத்துவைத்து, யாருக்கும் தெரியாமல் ஒழுகிவந்த களவொழுக்கமும், கையோடே கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. என் நிலைமை அப்பொழுது எப்படி இருந்திருக்கும் என்று நினைத்துப்பாரடி!'' என்று தலைவி குழைந்து கூறுகிறாள்.

அதுகேட்ட தோழி, ''அதற்கு உன்தாய் என்னடி கூறினாள்?'' என்று கேட்கிறாள்.

''என்ன கூறினாளா? என்னடி கூறுவாள்! அந்தப் பூ எப்படி வந்தது என்று என்னை கேட்கவுமில்லை; ஏன் பூவை வைத்துக்கொண்டு வந்தாய் என்று என்னைச் சினந்துகொள்ளவுமில்லை. நெருப்பைக் கையாலே தொட்டவர்கள் அக்கையைப் பிசைந்துகொள்ளுவதுபோல், கையைப் பிசைந்துகொண்டு, அலறிக்கொண்டு, வீட்டின் கொல்லைப்புறம் நோக்கிச் சென்றுவிட்டாள். அந்த நேரமாகப் பார்த்து நான் இந்தக் காட்டிற்கு ஓடிவந்துவிட்டேன்'' என்றாள் தலைவி.

அதுகேட்ட தோழி, ''ஏடி! அந்தப் பூ கீழே விழுந்துவிட்டதற்காக நீ ஏன் அஞ்சவேண்டும்? அஞ்சவேண்டிய காரியம் ஒன்றுமில்லையே!'' என்று தலைவிக்குத் தேறுதல் கூறமுற்படுகிறாள்.

''நான் அஞ்சவேண்டியதில்லையா? இவ்வளவும் கேட்டுவிட்டு, என்னை எதற்கும் அஞ்சவேண்டாம் என்கிறாயே? நீ என்ன பைத்தியமா?'' என்று தலைவி கேட்கிறாள்.

''உன்னுடைய தலைவன் தந்தமாலையை நீ சூடினாய் என்றால், அதனால் என்ன கெட்டுவிட்டது; நமது சுற்றத்தார்கள் அவனுக்கு உன்னை மணம்புரிவிக்க முற்படவேண்டியவர்களாகிவிட்டார்கள் என்று பொருள். அதுமட்டுமல்லாமல் நமது பரந்த வீட்டு முற்றத்திலே மணலைப் பரப்பி, பந்தலிலே அழகு திரைச்சீலைகளையெல்லாம் தொங்கவிட்டு இப்பொழுதே திருமணமும் செய்வார்கள் என்று பொருள். அதுமட்டுமல்லாமல், நேற்றுப் பகற்பொழுதில் மட்டுமின்றி, நேற்று இரவிலும்கூட, அந்த ஆயர் மகனுக்கும் உனக்கும் திருமணம் நடத்தினால் நல்லதல்லவா என்றுதான் உற்றாரெல்லாம் ஆராய்ந்தார்கள்! நிலைமை இப்படி இருக்கும்போது, நீ அஞ்சவேண்டிய அவசியமில்லை'' என்று தோழி தேற்றுமொழி கூறுகிறாள்.

தலைவி அச்சம் நீங்கித், தோழியோடு இல்லம் ஏக ஒருப்படுகிறாள்.

ஃ ஃ ஃ

இது முல்லைக்கலியின் பதினைந்தாவது செய்யுளில் காணப்படும் கருத்தின் சொல்லோவியமாகும். ஒருவனும் ஒருத்தியும் திருமணம் செய்துகொண்டு ஊரார்க்குத் தம் நிலையை அறிவிப்பதற்கு முன்பே, களவு முறையில் பழகி, ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக்கொண்டு, இல்லற வாழ்வுக்குத் தம்மைப் பண்படுத்திக்கொள்ளும் ஒரு சீரிய பண்பு, பண்டைக்காலத்தில், தமிழகத்தில் போற்றப்பட்டு வந்தது என்பது இச்செய்யுளின் மூலம் இனிது அறிப்படும். தலைவி, தோழி, நற்றாய், தந்தை, செவிலித்தாய் ஆகியோரின் மனநிலை களவொழுக்கத்தின்போதும், அது வெளிப்படும்போதும், அது வெளிப்பட்ட பிறகும் எப்படி எப்படி இருக்கும் என்பதைச் சோழன் நல்லுத்திரன் இச்செய்யுளின் மூலம் திறம்பட எடுத்துக்காட்டியுள்ளார். களவொழுக்கம் வெளிப்பட்டுவிடும் தன்மைக்குக் கள்ளுண்டவரின் நிலை வெளிப்படுவதையும், பருவமடைந்த தன் மகள்

ஆடவனோடு பழகிவிட்டாள் என்பதைக் கேட்ட தாய், வேதனையால் கையை உதறிப் பிசைவதற்கு, நெருப்பைத் தீண்டினவர்கள் கையை உதறிப் பிசைவதையும் உவமைகளாகக் கூறியிருப்பது பெரிதும் வியந்து மகிழ்வதற்குரியதாகும். நீலப்புடவையைக் கையாலே சிறிது ஏறத் தழுவிக்கொண்டு அச்சத்தால் தளர்ந்து நடந்தாள் தலைவி என்று புலவர் கூறுவது மிக்க நயம்பயக்கும் தன்மையதாகும். தலைவி களவு வெளிப்பட்டதென்று அஞ்சித் தோழிக்குச் சொல்ல, சுற்றத்தார் உன்னை அவனுக்கே கொடுக்க முடிவு செய்துள்ளார்கள் என்று சொல்லி, தோழி தலைவியின் அச்சத்தைப் போக்குவது இச்செய்யுளின் முக்கியக் கருத்தாகும்.

ஃ ஃ ஃ

தோழிநாம் காணாமை உண்ட கடுங்கள்ளை மெய்கூர
நாணாது சென்று நடுங்க உரைத்தாங்குக்
கரந்ததூம் கையொடு கோட்பட்டாம் கண்டாய்நம்
புல்இனத்(து) ஆய மகன்சூடி வந்ததோர்
முல்லை ஒருகாழும் கண்ணியும் மெல்லியால்
கூந்தலுள் பெய்து முடித்தேன்மற்(று) தோழிஆய்
வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே
அன்னையும் அத்தனும் இல்லராய் ஆய்நாண
அன்னைமுன் வீழ்ந்தன்(று)அப் பூ;

அதனை, வினவலும் செய்யாள் சினவலும் செய்யாள்
நெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டு
நீங்கிப் புறங்கடைப் போயினள் யானுமென்
சாந்(து)உளர் கூழை முடியா நிலந்தாழ்ந்த
பூங்கரை நீலம் தழீஇத் தளர்(பு) ஒல்கிப்
பாங்(கு)அரும் கானத்(து) ஒளித்தேன் அதற்(கு)எல்லா
ஈங்(கு)எவன் அஞ்சு வது;

அஞ்சல், அவன்கண்ணி நீபுனைந்தாய் ஆயின்நமரும்
அவன்கணடை சூழ்ந்தார் நின்னை அகல்கண்
வரைப்பில் மணல்தாழப் பெய்து திரைப்பில்
வதுவையுர் ஈங்கே அயர்ப அதுவேயாம்
அல்கலும் சூழ்ந்த வினை.

[முல்லைக்கலி—15

[மெய்கூர - உடலிடத்தே ஆட்டந்தோன்றி மிக; உரைத்தாங்கு - உரைத்தாற் போல; கரந்ததூம் - மறைந்து வைக்கப்பட்டிருந்ததாகிய களவொழுக்கம்; கோட்பட்டாம் - பிடித்துக்கொள்ளப்பட்டேம்; கண்டாய் - காண்; புல்லினத்தாயமகன் - ஆட்டினத்திடையன்; காழும் - மலர்க்கொத்தும்; கண்ணி - மாலை; ஆண்கள் தோளிலே சூடும்மாலை; மெல்லியால் - மெலிந்த இயல்பினை யுடையவளே; வெண்ணெய் - வெண்ணெய்யை; அந்தக் காலத்தில் வெண்ணெய்யைத் தலைக்குத் தேய்த்து மூழ்கினார்கள் தமிழ் மக்கள் என்றும் தெரியவருகிறது; உரைஇ - தேய்க்க; கதுப்பொடு - மயிரோடே, அத்தனும் - தந்தையும்; இல்லராய் - வீட்டினுள்ளே இருப்பவர்களாய்; வீழ்ந்தன்று - வீழ்ந்தது; வினவலும் - கேட்டலும்; சினவலும் - கோபித்

கால்வாய்கள்

"பொறியியலான்"

(4)

4.1. பேரணைகளைப்பற்றியும் அவைகள் கட்டப்படும் நோக்கத்தையும் கண்டோம். இக் கட்டுரையில் கால்வாய்களைப்பற்றிச் சிறிது விரிவாக ஆராய்வோம். நீரைப் பேரணைகள் தேக்கியபின், கால்வாய் மதகுகள் வழியாக, வேண்டிய அளவுப்படி, நீர் கால்வாய்களில் விடப்படும். கால்வாய்களே நாட்டின் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து, தேக்கிய நீரை இறுதியாக கழனிகளுக்கு அளித்து, உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்துகின்றன. ஆகையால் கால்வாய்களின் நோக்கம் நீரை வயல்களுக்குக் கொண்டுபோதல் என்பது தெளிவாகிறது.

4.2. ஒரு நீர்வழி (Water Course) யூடே ஒரு விநாடிக்கு (Second) ஒரு கன அடி (Cubic foot) வீதம் நீர் பாய்ந்தால், அந்தப் பாய்ச்சலை ஒரு Cusec என்று ஆங்கிலத்தில் கூறுகிறோம். அதையே தமிழில் ஒரு கன விநாடி என்று கூறுவதில் பிழையொன்றுமில்லை. கால்வாய்களை அவைகளின் அளவைப் பொறுத்து பின்கண்டவாறு பிரிக்கலாம்.

4.2.1. தலைக்கால்வாய் (Main Canal): இது பேரணையிலிருந்து எழும்பி தன்னுடைய கிளைக்கால்வாய்களுக்கு நீரைப் பிரித்துக்கொடுக்கும். ஆகையால் இதன் அளவு மிகப் பெரிதாயிருக்கும். பொதுவாக, இதன் பாய்ச்சல் 1000 கன விநாடிகளுக்குமேலிருக்கும்.

4.2.2. கிளைக்கால்வாய் அல்லது பிரிகால்வாய் (Branch Canal): தலைக்கால்வாயிலிருந்து நீரைப்பிரித்தெடுத்து, வயல் நோக்கிச் செல்லுமிது. ஆகையால் தலைக்கால்வாயைவிட அளவில் சிறிதாயிருக்கும். நீர்ப்பாய்ச்சல் 300 கன விநாடிகளுக்குக் குறைவாயிராது.

4.2.3. பகிர்கால்வாய் (Distributory): இது தலைக்கால்வாயிலிருந்தோ அல்லது கிளைக் கால்வாயிலிருந்தோ நீரை எடுத்துச்செல்லும். பெரிய பகிர்கால்வாயொன்றில் 300 கனவிநாடிகளுக்குக் கீழும், 25-க்கு மேலும், சிறிய பகிர் கால்வாயில் 25 கனவிநாடிகளுக்குக் குறைந்தும் பாய்ச்சல் இருக்கும்.

4.2.4. மேற்கண்ட கால்வாய்களை அமைப்பதே அரசினரின் கடமை. வாய்க்கால்கள் (Field Cannals) என்று கூறப்படும் ஓடைகளை வெட்டி நீரைத் தத்தம் வயல்களுக்குப் பாய்ச்சிக்கொளல் உழவரின் கடமையாகும். பொதுவாக இவ்வாய்க்கால்களில் ஓட்டம் 3 அல்லது 4 கனவிநாடிகளே இருக்கும்.

4.3. கால்வாய்களை நிறுவும் முறைகளைப் (Aligning Methods) பொறுத்து, பரந்த முறையில், சமஉயரக் கால்வாய்கள் (Contour canals), திடர்கால்வாய்கள் (Watershed canals), சரிவுக்கால்வாய்கள் (Sideslope Canals) என்றும் பிரிக்கலாம்.

4.3.1. சமஉயரக் கால்வாய்: இது ஏதாவதொரு சமஉயரக்கோட்டின் (Contour) வழியே நிறுவப்படும். ஆனால் அதன் படுகை, நீரைச் செலுத்துவதற்கு வேண்டிய அளவுக்குச் சிறிது கீழ்நோக்கிச் சரிந்தே செல்லும்.

தலும்: விதிர்த்திட்டு - கையை உதறிப்பிசைந்து; புறங்கடை - வீட்டிற்குப் பின்புறம்; சாந்து — சந்தனம்; உளர் — பூசி உலர்த்தின; கூழை - தலைமயிர்; முடியா — முடிந்து; தழீஇ - தழுவி; தளர்பு ஒல்கி - தளர்ந்து நடந்து; பாங்கு — பக்கத்தில்; அரும் கானம் - அரியகாடு; எல்லா - ஏடீ; அஞ்சல் - அஞ்சாதே; நமர் - சுற்றத்தார்; அவன் கணடை — அவனை அடுத்தலை; அகங்கண் - அகன்ற இடத்தையுடைய; வரைப்பில்- முற்றத்தில்; வதுவையும் - திருமணமும்; அயர்ப - செய்வார்கள்; அல்கலும் — இரவுகூட; சூழ்ந்தவினை — ஆராய்ந்த காரியம்.]

தலைக்கால்வாய்கள் சமஉயரக்கால்வாய்களாகவே நிறுவப்படும்.

4.3.2. திடர்கால்வாய் : நிலத்தின் இயற்கைப் பாங்கிலே நிலவரப்புகளை (Ridges)க் காணலாம். இவை சுற்றுப்புறத்திலேயே உயரமானவையாயிருப்பதால், மழை நீரைத் தன்னிரு மருங்கிலும் பிரித்து விடுகின்றன. இந்நிலவரப்புகள் அல்லது திடர்களின் வழியாகவே நிறுவப்படும் கால்வாய்களுக்குத் திடர்கால்வாய்கள் என்று பெயர். ஆகையால் இத்தகைய கால்வாயொன்றை ஆறோ மற்ற ஏதாவதொரு நீர் வழியோ குறுக்கிட முடியாது என்பது தெளிவு. கிளைக்கால்வாய்கள், திடர்கால்வாய்களாக அமைக்கப்படும்.

4.3.3. சரிவுக்கால்வாய் : சம உயரக்கோடுகளை ஒன்றொன்றாக வெட்டிக்கொண்டு இக்கால்வாய் செல்லும். ஆனால் ஒரு திடரிலோ அல்லது பள்ளத்தாக்கிலோ செல்லாது.

4.4. ஒரு கால்வாயின் குறுக்கமைப்பு படம் 1-ல் காட்டியபடி இருக்கும். கால்வாயின் முழு அளவு நீர் (Full supply) செல்லும் பொழுது உள்ள நீர் மட்டத்துக்கும், படுகை மட்டத்துக்குமுள்ள வித்தியாசமே முழு அளவு ஆழம் (Full supply depth) எனப்படும். அவ்விதமே அரை அளவு செல்லும்பொழுது அரை அளவு ஆழம் ஆகும். கால்வாயின் மருங்குகள் (Sides) சாய்ந்திருக்கும். இச்சாய்வு, பொதுவாக, படங்களில் காட்டியவாறு 1-க்கு 1 ஆகவோ, ½-க்கு 1 ஆகவோ இருக்கும். கால்வாயின் படுகையும் நீரோட்டத்திக்கில் சரிந்திருக்கும். இப்படுகைச்சரிவு (Bed slope) சுமார் 5000 அடிக்கு 1 அடி ஆக இருக்கும். படுகை அகலம் (Bed with), நீரளவைப்பொறுத்து 5 அடியிலிருந்து 200 அடி வரைகூட இருக்கலாம்.

பழைய நிலமட்டத்துக்குக்கீழ் கால்வாய் வெட்டப்பட்டிருந்தால் அது வெட்டுக்கால்வாய் (Canal in Cutting) எனவும், பழைய நிலமட்டத்துக்கு மேல், புதிதாக நிறுவப்பட்ட வரப்புகள் (Embankments) இரண்டுக்கு நடுவே அமைக்கப்பட்டால் வரப்புக் கால்வாய் (Canal in Embankment) என்றும் கூறப்படும்.



கால்வாயின் குறுக்கமைப்பு
படம்.1.



வெட்டுக் கால்வாய்
படம்.2



வரப்புக் கால்வாய்
படம்.3.

4.5. கால்வாய்களுடன் இணைந்து நிற்கும் துணை அமைப்புகளைப்பற்றி அறிவோம்.

4.5.1. தலைமதகு (Head Regulator or Head sluice): தலைக்கால்வாய்க்கோ, அல்லது கிளைக்கால்வாய்க்கோ வேண்டிய அளவு நீரைப் பங்கிட்டுக்கொடுப்பதற்காக, கதவுகள் நிறுவப்பெற்று இயங்குமிது. கதவுகளை முழுவதும்மூடிவிட்டால், கால்வாயில் நீர் பாயவே முடியாது.

4.5.2. அரிகண் (Scour Vent): அணைக்கட்டுக்கு முன்னால், பிரியும் கால்வாயின் தலைமதகுக்குப் பக்கத்தில் அணைக்கட்டைச் சேர்ந்தவாறே இவை அமைக்கப்படும். தலைக்கால்வா

யில தூர் (Silt) சேர்ந்துவிடாதவாறு ஆறறை அரித்து, அரித்து தலைமதகுகளுக்கு முன்னால், ஆழமாகவே வைத்திருக்கும். ஆகையால் இதன் சில்மட்டம் (sill level) ஆற்றுப் படுகை மட்டத்திலேயே இருக்கும்.

4.5.3. குழாய் வழிகள் (Pipe outlet): சிறு பகிர்கால்வாய்களிலிருந்து கழனிகளுக்கு நீரை எடுக்க, சிறு குழாய்களை கால்வாய்களுக்குக் குறுக்கே பொருத்துவதுண்டு. இவைகளைக் குழாய்வழிகள் என்பதுண்டு.

4.5.4. மிகையோடிகள் (Surplus Escapes): கால்வாயின் நீர்மட்டம் மழை பொருட்டோ, மற்றையக் காரணங்கள் பொருட்டோ, முழு நீர் மட்டத்தைவிட உயருமாயின், பல சேதங்கள் கால்வாய்க்கு விளையலாம். ஆகையால் இந்த மிகையோடிகளின் வழியாக அந்த மிகுதிநீர் வழிந்தோடி, முழுநீர் மட்டத்துக்குமேல், நீர் மட்டம் உயராமல் நிறுத்தப்பட்டு, கால்வாய் பாதுகாக்கப்படும்.

4.5.5. இறுதியணை (Tail Dam): கால்வாயின் இறுதியில் இவ்வணை போடப்படும். இதனுல் நீர்மட்டம் உயரமாகவே நிற்க ஏதுவாகிறது. நீர்மட்டம் உயருவதால், மேட்டு நிலங்களுக்கும் நீர் செல்லும்.

4.6. நில அமைப்பைப் பொறுத்துக் கால்வாய்கள் வெவ்வேறு தோற்றமளிக்கின்றன.

4.6.1. நிலம் மிகவும் விரைவாகச் சரிந்திருந்தால், அதன் ஊடே அமைக்கப்பட்ட கால்வாயின் படுகை அகலம் சிறிதாகவும், படுகைச் சரிவு அதிகமாகவும் இருக்கும். இத்தகைய கால்வாய்க்கு விரைகால் (chute) என்று பெயர். இதில் நீர்வேகம் அதிகமாக இருக்குமாதலால் இதன் மருங்குகள் கான்க்ரீட்டினுலோ அல்லது மற்றைய உரப்பொருள்களாலே அமைக்கப்படும்.

4.6.2. பாறை நிலம் குறுக்கிட்டால், கால்வாயின் படுகை அகலம் குறைக்கப்பட்டு, நீர் வேகம் அதிகமாக்கப்படும். ஆனுல் படுகைச் சரிவு அதிகமாயிராது. இத்தகைய கால்வாய்க்கு ஒடுங்கு கால்வாய் (Flumed Canal) எனப் பெயர்.

4.6.3. நிலம் விரைவாகச் சரிந்திருந்தால், விரைகால் அமைப்பதற்குப் பதிலாக, கால்வாயில் பல வீழ்ச்சிகளை (Drops) உண்டுபண்ணலாம்.

‘விஞ்ஞானி’

[உயரிய விஞ்ஞான மாத வெளியீடு]

ஆசிரியர்

வி. சுப்பிரமணியம்

B. Sc. (Hons) F. C. S., M. A.

மத்திய கல்லூரி யாழ்ப்பாணம், இலங்கை.

விஞ்ஞானத்தின் வியப்புக்குரிய ஆக்கங்களையும், அருமை பெருமைகளையும், சீரிய கொள்கைகளையும், விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறுகளையும் திறம்படத், தெள்ளத்தெளிய, யாவரும் உணரும்வண்ணம் எடுத்தியம்பும் சிறந்த வெளியீடாகும். அறிவு வேட்கையுடையோர்க்கு நல்ல விருந்தளிப்பதாகும்.

தனி இதழ் விலை அணா 8. ஆண்டு சந்தா ரூ. 6.

4.6.4. கால்வாயின் வழியிலே ஏதாவது ஒரு ஆறோ அல்லது நீர்வழியோ குறுக்கிட்டால், கால்வாயை ஆற்றுக்கு மேலோ, கீழோ அல்லது ஆற்றின் நீர்மட்டத்திலேயோ கொண்டுசெல்லுதல் உண்டு. நீர்ப்பாலத்தின் (Aqueduct) வழியாக ஆற்றின் மேலும், உறிஞ்சி (Siphon) வழியாக ஆற்றின் கீழும், சமமட்டக் குறுக்கீடு (Level Crosing) வழியாக ஆற்றின் மட்டத்திலேயும், கால்வாயை எடுத்துச் செல்லலாம்.

கடமைக்காக உயிர்விடுதல்

உலக ஆசையில் மூழ்கிய ஒரு புழுவாக இறப்பதினும், உண்மையைப் போதித்துக் கொண்டே கடமையியற்றும் களத்திலே உயிரை விடுதல் நன்றே, மிகமிக நன்றே.

—விவேகானந்தர்.

வினாவும் விளக்கமும்

டால்மியாபுரப் பெயர் மாற்றப் போராட்டம் பஞ்சம், பசி, பட்டினியைப் போக்கிற்றா?

இந்தக் கேள்வியை ஆங்காங்குள்ள கம்யூனிஸ்டுத் தோழர்கள் கேட்கத் தவறுவதில்லை. பஞ்சம், பசி, பட்டினியைப் போக்குவதற்கென்று ஆரம்பிக்கப்பட்டதல்ல டால்மியாபுரப் போராட்டம் என்பதை அத்தகைய அன்பர்கள் எப்படி அறிவார்கள்? அவர்கள்தாம் அகில உலகக் கண்ணோட்டக்காரர்களாயிற்றே!

டால்மியாபுரத்தைக் கல்லக்குடி என்று மாற்றிவிட்டால், இந்த நாட்டிலிருக்கும் பஞ்சம், பசி, பட்டினி அத்தனையும் அடியோடு அகன்றுபோய்விடும் என்று கழகம் தீர்மானம் போட்டதா? அல்லது அறிஞர் அண்ணா அவர்கள்தாம் அப்படிக் கூறினார்களா? அல்லது போராட்டத் தலைவர் கருணாநிதிதாம் அந்தப்படிக்கு வாக்குக்கொடுத்தாரா? இல்லையே! எந்த நோக்கத்திற்காகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்டதோ, அந்த நோக்கத்தைப் புரிந்துகொள்ளுகிற அளவுக்கு அறிவும், ஆற்றலும், அமைதியும் இருந்திருக்குமேயானால், மேற்கண்ட கேள்வியைக் கேட்க அத்தகையோர் துணிந்திருக்கமாட்டார்கள்.

கழகத்தார், மாங்கொட்டை ஊன்றினால் மாம்பழமும், புளியங்கொட்டையை ஊன்றினால் புளியம்பழமும் எதிர்பார்க்கும் பலன்களாகக் கிடைக்கும் என்று எண்ணிடுவோரேயல்லாமல், மாங்கொட்டையை ஊன்றிவிட்டுப் புளியம்பழம் கிடைக்கும் என்று கூறுபவர்களோ அல்லது அதனை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்களோ அல்லர் என்பதை, அந்த 'அவசரக்' காரர்கள் உணரவேண்டும்.

டால்மியாபுரத்தைக் கல்லக்குடி என்று மாற்றுகிறோம் என்றால், திராவிட நாட்டில் நிலைநாட்டப்பட்டிருக்கும் ஒரு அவமானச் சின்னத்தை அகற்றுகிறோம் என்று பொருள்; அழிக்கப்படவேண்டிய பல அவமானச் சின்னங்களுக்கு முன் எடுத்துக்காட்டு என்று பொருள்; வடநாட்டு இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிறோம் என்று பொருள்; வாட்டுகிற வடநாட்டுச் சுரண்டல் தன்மையை எதிர்க்கிறோம் என்று பொருள்; லைசென்ஸ் கொடுத்த விதத்தில், டில்லி ஆட்சி ஆதிக்கத்தை வெறுக்கிறோம் என்று பொருள்; வடநாட்டினின்றும் தென்னாடு—திராவிடநாடு பிரிந்துபோக எண்ணுகிறது என்பதை வடநாட்டு ஆட்சியாளரும், வடநாட்டு வணிகக்கோமான்களும், வடநாட்டு அரசியல் தலைவர்களும் உணரும்படி செய்கிறோம் என்று பொருள்; திராவிடநாட்டை வடநாட்டு அரசியல்—பொருளாதிகார ஆதிக்கத்தினின்றும் மீட்கவேண்டும் என்ற உணர்ச்சியைத் திராவிடப் பெருங்குடி மக்களுக்கு ஊட்டுகின்றோம் என்று பொருள்! இவ்வளவு காரணங்களின் அறிகுறியாக நடத்தப்பட்ட போராட்டந்தான் டால்மியாபுரப் பெயர் மாற்றப் போராட்டம். இந்த அடிப்படை நோக்கங்களைப் புரிந்துகொள்ளுகிற அறிவுடையவர்கள், இந்தப் போராட்டம் பஞ்சம், பசி, பட்டினியைப் போக்கிற்றா என்று கேட்கமாட்டார்கள்!

ஆனால் இத்தகைய போராட்டங்கள், திராவிடத்தில், எதிர்காலத்தில் பஞ்சம், பசி, பட்டினி ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்வதற்கான வகைகளைப் பெறுவதற்கு வழிகோலுவனவாகும். பஞ்சம், பசி, பட்டினி ஆகியவற்றை உடனடியாகப் போக்குவதற்கான—தெளிவான—உறுதியான—நம்மால் செய்யக்கூடியதான வழி இருந்தால்—காட்டப்பட்டால் அதையும் கடைப்பிடிக்கத் திராவிட முன்னேற்றக் கழகம் தயாராகத்தானிருக்கிறது; அதற்காகத் தயங்கியதில்லை.

கம்யூனிஸ்டுத் தோழர்கள் எடுக்கும் நடவடிக்கைகள், தொடுக்கும் கிளர்ச்சிகள், கொண்டாடும் விழாக்கள், பேசும் பேச்சுக்கள் எல்லாமும் பஞ்சம்—பசி—பட்டினியைத் தீர்ப்பதற்கென்றே செய்யப்படுபவைகள் போலவும், இதுவரையில் பஞ்சம்—பசி—பட்டினியைப் போக்குவதில் வெற்றிக்குமேல் வெற்றி ஊர்தோறும் தொடர்ந்து பெற்றுவந்திருப்பவர்கள் போலவும் நினைத்துக்கொண்டு, நமது அரசியல்

நடவடிக்கையில் ஒன்றை எடுத்துக்கொண்டு கேட்கிறார்கள், "டால்மியாபுரப் போராட்டம் பஞ்சம்—பசி—பட்டினியைப் போக்கிற்று?" என்று. நமது நடவடிக்கைகளெல்லாம் பஞ்சம்—பசி—பட்டினியைப் போக்குவதாகத்தான் இருக்கவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்றால், நமக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் அவர்களைத் திருப்பிக் கேட்க? டல்லஸ் எதிர்ப்புப் போராட்டம் நடத்திவிட்டால் பஞ்சம்—பசி—பட்டினி போய்விடுமா? கிருமிப்போர் எதிர்ப்பு நாள் கொண்டாடிவிட்டால் பஞ்சம்—பசி—பட்டினி போய்விடுமா? லெனின் நாள் கொண்டாடிவிட்டால் பஞ்சம்—பசி—பட்டினி போய்விடுமா? ஸ்டாலின் நினைவு வாரம் கொண்டாடிவிட்டால் பஞ்சம்—பசி—பட்டினி போய்விடுமா? நவம்பர் புரட்சி நாள் கொண்டாடிவிட்டால், ரோஸன்பர்க் தம்பதிகள் கொலைத் தண்டனை எதிர்ப்புக் கூட்டம் நடத்திவிட்டால், அமெரிக்கச் செய்தி இலாகா கண்ணாடிகளைச் சென்னையில் உடைத்துவிட்டால் பஞ்சம்—பசி—பட்டினி போய்விடுமா? எவ்வளவு நேரம்பிடிக்கும் இப்படிப்பட்ட கேள்விகளை அடுக்கிக்கொண்டுபோக?

மற்றக் கட்சிகளின் திட்டங்கள் ஒத்துவராவிட்டால் ஏற்றுக்கொள்ளாமலிருக்கலாம்; காரண காரியங்களைக் கூறிக் கண்டிக்கலாம்; ஆனால் நோக்கத்திற்கு வேறு பொருள்கற்பித்து, அந்தக் கற்பனையில் நின்று நாட்டியம் ஆடுவது அரசியல் இழிசெயல் என்பதை குற்றஞ்சுமத்துவோர் உணரவேண்டும்.

"டால்மியாபுரத்தைக் கல்லக்குடி என்று மாற்று; இல்லையேல் நாங்கள் மாற்றுவோம்" என்று கழகத்தார் கூறினர். அப்படி இன்று மாற்றிக் காண்பித்தனர். எந்த அளவுக்கு ஆட்சியாளரையும், வடநாட்டாரையும், நாட்டுப் பெருங்குடி மக்களையும் அறியவைக்கவேண்டும் என்று எண்ணப்பட்டதோ, அந்த அளவுக்கு அறிவுறுத்தப்பட்டுவருகிறது.

ரஷ்யாவில் 'பீட்ரோகிராட்' என்பதை 'லெனின்கிராட்' என்று மாற்றுவதற்கு எப்படிப்பட்ட கொள்கை—உணர்ச்சி—ஊக்கம் ஆகியவை அடிப்படைக் காரணங்களாக அமைந்தனவோ, அப்படிப்பட்ட அவைபோன்ற கொள்கை—உணர்ச்சி—ஊக்கம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் டால்மியாபுரம், கல்லக்குடி என்று மாற்றப்படுகிறது என்பதைக் கம்யூனிஸ்டுத் தோழர்கள் தம் ஓய்வு நேரத்தில் சிந்தித்துணரவேண்டும். 'பீட்ரோகிராடை', 'லெனின்கிராடாக' மாற்றியது பஞ்சம்—பசி—பட்டினி ஆகியவற்றைப் போக்கும் நோக்கத்திற்காக அல்ல என்பதையும் அவர்கள் உணரவேண்டும்.

விருந்தினர் மாளிகைக்கு வெள்ளைக்காரன் வைத்த ஆங்கிலப் பெயரை மாற்றிவிட்டு, அதற்கு 'ராஜாஜி ஹால்' என்று பெயரிட எத்தகைய உணர்ச்சி தேசியத் தோழர்களுக்கு அடிப்படையாக நின்றதோ, அது போன்றதொரு உணர்ச்சிதான் கல்லக்குடிப் போராட்டத்திற்கும் அடிப்படையாக நிற்கிறது.

டால்மியாபுரப் பெயர்மாற்றப் போராட்டத்தால், கழகத்தார் எதிர்பார்த்த நோக்கம், பஞ்சம்—பசி—பட்டினி போவது அல்ல; வடநாட்டு ஆதிக்க எதிர்ப்புணர்ச்சி வீறிட்டெழுவதேயாகும். எனவே டால்மியாபுரம், கல்லக்குடி என்று மாறுவதால் பஞ்சம்—பசி—பட்டினி போயிற்றா என்று கேட்பது அறிவீனம்!

தி. மு. க. இரயில் நிறுத்தப் போராட்டத்திற்கும் பண்டித நேருவுக்கும் எவ்வகையில் தொடர்பு?

தென்னாட்டில்—திராவிட நாட்டில், எவ்வித உரிமைக்கிளர்ச்சிகள் துவக்கப்பட்டாலும், அவற்றை அலட்சிய மனப்பான்மையோடு நோக்குவதும், பேசுவதும், அவற்றைமுட்டாள்தனமானவை" என்று ஏசுவதும், இந்தியப் பிரதமர் பண்டிதநேருவின் வழக்கமான செயலாகிவிட்டது.

1952-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் முதல் நாளில், திராவிடநாட்டுப் புகைவண்டி நிலையங்களிலுள்ள பெயர்ப்பலகையின்மீது எழுதப்பட்டிருக்கும் இந்தி எழுத்துக்களைத் தார்கொண்டு அழிப்பதன்மூலம், வடநாட்டு இந்தி ஏகாதிபத்தியத்தினிடத்துள்ள எதிர்ப்பை, திராவிட இயக்கத்தார் வெளிப்படுத்தினர். திராவிட நாட்டுப் புகைவண்டி நிலையங்களில், இந்தியில் பெயர்ப்பலகைகள் எழுதப்பட்டிருப்பது, அவசியத்தை ஒட்டிச் செய்யப்பட்டது அல்ல; வடநாட்டு ஆட்சி அதிகாரத்தை, இந்திமொழி ஆதிக்கத்தை, நிலைநாட்டுவதற்காகச் செய்யப்பட்டிருப்பதாகும்; தாய்மொழியே நூற்றுக்கு எண்பத்தினான்கு பேர்களுக்குத் தெரியாமல் இருக்கும்போது, இந்தி மொழியில் பெயர்

எழுதப்பட்டிருப்பது மொழி ஆதிக்கத் திணிப் பேயாகும் என்றெல்லாம் சுட்டிக்காட்டித், திராவிட இயக்கத்தார், இந்திப் பெயர்களை அகற்றும்படி அரசியலாரிடம் வற்புறுத்திக் கூறினர். அரசியலார் அதனைக் கேட்காமல் போகவே, இந்திமொழி ஆதிக்கத் திணிப்பிற்குத் தென்னாட்டில் எதிர்ப்பு உண்டு என்பதை வடநாட்டார் அறியும்படிச் செய்யும் அறிகுறியாகவும், வடநாட்டு ஆதிக்கத்தினின்றும் தென்னாடு மீளவேண்டும் என்ற உணர்வைத் தென்னாட்டார் பெறும்படிச் செய்யும் அறிகுறியாகவும் இருக்கட்டும் என்று கருதி 'இந்தி அழிப்புப் போராட்டத்தை' ஒரு நாள் அடையாளக் கிளர்ச்சியாக திராவிட இயக்கத்தார் நடத்திக்காட்டினர். இந்த உரிமைக் கிளர்ச்சியைப் பண்டித நேரு "முட்டாள்தனமானது" என்று குறிப்பிட்டார். அப்பொழுது அறிஞர் அண்ணா அவர்கள், "பண்டித நேரு மிகப் பெரியவர்; ஆனால் மிகச் சிறிய தவறைச் செய்தார். அவரை மன்னிப்போம். மறப்போம்" என்று கூறித் தம் பெருந்தன்மைக்கேற்ப நடந்துகொண்டார்.

பிறகு சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்கவேண்டும், ஆந்திரத்தோடு இணைத்திருப்பது அடாது என்ற உரிமைக்குரலைப் பேச்சின்மூலமும், எழுத்தின் மூலமும், தீர்மானத்தின் மூலமும், பேட்டியின் மூலமும் பல்வேறுதிறத்தினர், பல்வேறுவகைகளில் எடுத்துக்காட்டியும், இந்திய அரசியலார் செவிகொடுக்காமற் போகவே, திருத்தணியில் இரயில்களை அமைதியான முறையில் சிலநிமிடநேரங்கள் நிறுத்தி வைப்பதன்மூலம், உரிமைக்குரலின் அவசியத்தையும், அளவையும், ஆற்றலையும் நாட்டவரும், நாட்டாட்சியாளரும் அறியட்டும் என்ற முறையில் "இரயில் நிறுத்தக் கிளர்ச்சி" திருத்தணியில் நடத்தப்பட்டது. இந்த இரயில் நிறுத்தக் கிளர்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தாரும், தமிழர்கள் என்ற முறையில் பங்கு கொண்டிருந்தனர்.

ஏன் இந்த இரயில் நிறுத்தக் கிளர்ச்சியை, உரிமைக்குரலை அறிவிக்கும் ஒரு ஆயுதமாகத் திருத்தணியில் கொண்டனர் என்றால், அது தான், அமைதியான முறையில் அறிவிக்கக் கூடிய கடைசி ஆயுதமாக இருந்தது.

ஆந்திர மாகாணப் பிரிவினையைக்கோரி கூட்டங்களை போட்டும், தீர்மானங்களை நிறைவேற்றியும், தூதுக்குழுக்கள் சென்று சொல்லியும், உண்ணாவிரதம் இருந்து வற்புறுத்தியும் அந்தக் கோரிக்கைக்கு இணங்காத நேரு, பொட்டி சீராமுலு இறந்தபிறகு, ஆந்திராவின் பல பகுதிகளில் இரயிலை நிறுத்திக், கொள்ளையடித், , தீவைத்துக்கொளுத்தித், தண்டவாளத்தைப் பெயர்த்துத், தந்திக்கம்பியை அறுத்து, அதிகாரிகளை உதைத்ததற்குப் பிறகு தான் இணங்க முன்வந்தார். அதுபோலவே, எல்லா ஜனநாயக வழிகளையும் பார்த்துவிட்டுக் கடைசியில் இரயிலை நிறுத்துதல், கூட்ஸ் வண்டிகளைக் கொள்ளையடித்தல், கட்டிடங்களுக்குத் தீவைத்தல் போன்ற செயல்களின் மூலம் தங்கள் உரிமைக்குரலைக் காட்டியதற்குப் பண்டித நேரு இணங்கினார். இவைகளில் இருந்து நாடு கற்றுக்கொண்ட பாடம் என்னவென்றால், "அடிக்கறக்கிற மாட்டை அடிக் கறக்கவேண்டும்," "பாடிக்கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்கவேண்டும்," அதுபோல, "இந்த 'நேருமாட்டை' இரயில் நிறுத்தக் கிளர்ச்சியின் மூலமே இணங்கவைக்க வேண்டும்" என்பதாகும். இந்தப் பாடத்தைத்தான் திருத்தணியில் கழகத்தோழரும் பிறரும் படித்துக் காட்டினர்.

ஆந்திரா நகரங்களிலும், பெல்லாரியிலும் அடித்தல்—உதைத்தல்—தீவைத்தல்—கொள்ளையடித்தல் போன்ற மறக்கிளர்ச்சிகளில் மக்கள் ஈடுபட்டதைப் போன்று, திருத்தணித் தமிழர்கள் ஈடுபடாமல், 'இரயிலைச் சங்கிலி பிடித்து இழுத்துச் சிலநிமிடநேரம் நிறுத்திவைத்தல்' என்ற அறக்கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

இந்த உரிமைக்கிளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடும்போதும் பண்டித நேரு, "முட்டாள்தனமானது" என்றே குறிப்பிட்டார்.

வடநாட்டில் இவற்றையும் மிஞ்சிய பலாத்கார கிளர்ச்சிகள் நடைபெறும் போதெல்லாம், அவற்றை ஏசிப்பேச முன்வராத நேரு, தென்னாட்டில் நடைபெறும் எந்த அறவழி உரிமைக் கிளர்ச்சியானாலும் அதனை "முட்டாள்தனமானது" என்று குறிப்பிடத் தயங்குவதில்லை. பண்டித நேருவின் இந்த அலட்சியப் போக்கைக் கண்டு, அறிஞர் அண்ணா அவர்கள், நேருவால் அலட்சியப் படுத்தப்பட்ட தென்னாட்டு உரிமைக்குரலின் அளவை—திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றலை—திராவிட முன்னேற்

றககழகத்தின் பின்னால் அணிவகுத்து நிற்கும் ஆயிரமாயிரம் இளைஞர்களின் வீர வரலாற்றைப் பண்டித நேரு ஒரு நாளாவது அறியட்டும் என்ற முறையில், 1953 ஜூலைத் திங்கள் 15-ம் நாள் பகற்பொழுது மட்டும் திராவிடநாட்டில் ஓடுகின்ற இரயில்களெல்லாம், ஒரு சிறிது நேரம், நிலையங்கள் தோறும் நிற்கட்டும்; அதனைப் பண்டித நேரு அறியட்டும்; அவரது ஆட்சி உணரட்டும்; அகில உலகம் தெரிந்து கொள்ளட்டும்; தென்னாட்டவர் உணர்ச்சி பெற்று எழட்டும் என்று அறப்போர்த் திட்டம் வகுத்திட்டார்கள்.

எந்த 'இரயில்நிறுத்தக் கிளர்ச்சியின்' மூலம் வெளிப்படுத்தப்பட்ட உரிமைக் குரலைப் பண்டித நேரு "முட்டாள்தனம்" என்று ஏசினாரோ, அதே 'இரயில் நிறுத்தக் கிளர்ச்சியின்' மூலம், திருத்தணியில் மட்டுமல்லாமல் தென்னாடெங்கணும் உள்ள உரிமைக்குரலின் அளவையும், ஆற்றலையும் ஜூலைத் திங்கள் 15-ம் நாள் பண்டித நேரு அறியட்டும்; பாடம் கொள்ளட்டும் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் இரயில் நிறுத்தப் போராட்டத்தில் இறங்கியது. திராவிட முன்னேற்றக் கழகம் தன் இலட்சியத்தின் நோக்கத்தையும், தன் ஆற்றலின் அளவையும் பண்டித நேருவுக்கு மட்டுமல்லாமல், அவனியிலுள்ளோர் அனைவர்க்கும் அறிவித்துவிட்டது!

தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக

இரண்டாவது மாநாடுகள்

இடம் : முத்தமிழ் வள்ளல் ஏ. ஒய். ஏ. நாடார் தோட்டம்

10 - 4 - 54 சனி	11 - 4 - 54 ஞாயிறு
சமூக சீர்திருத்த மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர்: திரு ஏ. கோவிந்தசாமி	தலைவர்: திரு என். வி. நடராஜன்
துவக்குபவர்: திரு க. அன்பழகன்	துவக்குபவர்: திரு ஈ. வெ. கி. சம்பத்

பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா,

கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்வார்கள்.

இரு நாட்களிலும் நாடகங்கள் உண்டு

கட்டணம்: வரவேற்பாளர் ரூ. 5; பிரதிநிதி ரூ. 2; பார்வையாளர் ரூ. 1; பெண்கள் அணா 8

எஸ். பெத்தண்ணா,	ஏ. வி. பதி,	சே. கே. நீலமேகம்,
பொருளாளர்.	செயலாளர்.	வ. கு. தலைவர்.

அறிவுப் புரட்சியும் சார்லஸ் டார்வினும்

"பரணன்"

ஐரோப்பாக் கண்டத்தில் மறுமலர்ச்சி இயக்கத்தின் விளைவுகளாகப் பல்வேறு புரட்சிகள் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டன. அந்தப் புரட்சிகள் உலகத்தின் தோற்றத்தையே மாற்றிப் பழைய உலகு வேறு, புதிய உலகு வேறு என்ற நிலைமைகளைத் தெளிவுபடுத்திவிட்டன. அப்படிப்பட்ட புரட்சிகளிலே அறிவுப் புரட்சியும் ஒன்று.

அறிவுப் புரட்சியோடு பெரும்வகையில் சேர்த்துக் கணக்கிடப்படும் புரட்சிகள் அரசியல் புரட்சி, தொழிற்புரட்சி, சமூகப்புரட்சி, பொருளாதாரப் புரட்சி போன்றவைகளாகும். பழைய கருத்துக்களையெல்லாம் தகர்த்திடும் விதத்தில், புதிய கருத்துக்கள் தோன்றிய தன்மையைத்தான் அறிவுப்புரட்சி என்று அழைக்கிறோம்.

ஏறத்தாழ கி. பி. 18-ம் நூற்றாண்டு தொடக்கத்தில் அறிவுப்புரட்சியின் வாடை ஐரோப்பாக் கண்டத்தில் வீசத்தொடங்கிற்று என்னலாம். கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டை மறுமலர்ச்சிக்காலம் என்று கூறினாலும், அதற்கான சூழ்நிலை இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே உருவாகிவந்ததைப்போல, அறிவுப் புரட்சிக்கான சூழ்நிலையும் கி. பி. 1800-க்கு இரண்டொரு நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோற்றங்கொள்ளத் துவங்கியது என்னலாம். அறிவுப்புரட்சிக்கான அறிகுறிகள் கி. பி. பதினேழாவது நூற்றாண்டிலேயே வேரூன்ற ஆரம்பித்துவிட்டன.

இங்கிலாந்தில் முதலாம் சார்லஸ் மன்னனுக்கு மருத்துவராக விளங்கிய டாக்டர் வில்லியம் ஹார்வி என்பார், மனிதனின் உடலில் குருதியோட்டம் எப்படிச் சுற்றுகிறது என்பதைக் கண்டறிந்து, அதனை விளக்கிக் கி. பி. 1628-ல் நூல் ஒன்று வெளியிட்டார். உடலில் குருதியோட்டம் எப்படிச் சுற்றுகிறது என்பதைப் பண்டைக்கால சீன நாட்டில் கண்டறியப்பட்டிருந்தது என்றாலும், அந்த அறிவு மேற்கத்திய நாடுகளுக்குப் பரவவேயில்லை. கி. பி. 1700-ம் ஆண்டு வாக்கில் மிகச்சிறந்த ஆங்கிலக் கணித வல்லுநரான ஸர் ஐஸெக் நியூட்டன், நில இழுப்பு ஆற்றல் பற்றிய கோட்பாட்டைச் (Laws of Gravitation) கண்டறிந்து வெளியிட்டார். பொருள்கள் நிலம் நோக்கி ஏன் விழுகின்றன, எப்படி விழுகின்றன என்பதற்கான காரணங்களை அவர் தெளிவுபடுத்தினார். ஏறத்தாழ நியூட்டன் வாழ்ந்த அதே காலத்தில், பிரெஞ்சு நாட்டின் அறிவியல் அறிஞன் லாமார்க் (Lamark), விலங்குகள், மரஞ்செடிகொடிகள் ஆகியவற்றின் வாழ்வு—வளர்ச்சிபற்றி ஆராய்ந்தறிவதில், தம் வாழ்நாளைச் செலவிட்டார். அவர் உயிர்ப்பொருள்களின் உறுப்புகள், அந்த உயிர்ப்பொருள்கள் வாழும் சூழ்நிலைக்கேற்றாற்போல் வளர்கின்றன அல்லது மாறுகின்றன என்ற கோட்பாட்டை உலகின்முன் வைத்தார். இத்தகைய சீரிய பெருங் கண்டுபிடிப்புகளெல்லாம், மக்கள் தம்மைச் சுற்றியுள்ள பொருள்களின் 'எப்படி', 'ஏன்' தன்மைகளை ஆராய்ந்தறியத் தலைப்பட்டுவிட்டார்கள் என்பதையே காட்டுவனவாகும். மனிதனின் வியப்புக்குரிய 'எப்படி', 'ஏன்' என்ற கேள்விகளுக்கெல்லாம் மிகச் சீரிய முறையில் விடை கூறத்தக்க அரிய நூல் ஒன்றை, "உயிரினங்களின் தோற்றம்" (The Origin of Species) என்ற பெயரில், 1859-ம் ஆண்டில், சார்லஸ் டார்வின் என்ற அறிவியல் பேரறிஞர் வெளியிட்டார்.

அறிவுப் புரட்சிக்கு மையப்புள்ளியாக வைத்து எண்ணத்தகுந்த அளவுக்குச் சிறப்புடையது, சார்லஸ் டார்வினின் அரிய நூலாகும். சார்லஸ் டார்வின் 1809-ம் ஆண்டில் பிறந்தார். அவர் பள்ளியில் கலவையியல் (Chemistry) பாடம் எடுத்து படிக்க விரும்பினார். அந்த நாட்களில் அறிவியல் பாடங்கள்

...சொல்லிக்கொடுக்கப்படுவ
தில்லை. பள்ளியில் அவர் கிரேக்கம், இலத்தீன் முதலிய மொழிகளைத்தான் படித்துக்கொள்ள முடிந்தது. அவர் பள்ளிப் பருவக் காலத்தில் தம் வீட்டுத் தோட்டத்தில் ஒரு கொட்டகை போட்டுக்கொண்டு, அதில், அவரும் அவருடைய உடன்பிறந்தவரும் சேர்ந்து ஆராய்ச்சிகள் நடத்துவதில் வேடிக்கை செலுத்திவந்தனர். ஆராய்ச்சி நடத்துவது டார்வினுக்கு ஒரு வேடிக்கை விளையாட்டாக இருந்தது. அம்மாதிரியான வேடிக்கை வேலைகளில் அதிக நேரம் வீணாக்கிக்கொண்டு இருக்கக்கூடாது' என்று அவர் பலதடவைகளில் ஆசிரியர்களால் கண்டிக்கப்பட்டிருக்கிறார். பல்வேறுவிதமான செடிகொடிகள், கிளிஞ்சல்கள், கற்கள், பூச்சிகள் ஆகியவற்றைச் சேர்ப்பதிலே தனி ஆர்வம் காட்டிவந்தார் டார்வின், தம் பள்ளிப் பருவக் காலத்திலேயே.

டாக்டர் டார்வின் எடின்பர்க் பல்கலைக் கழகத்தில் இரண்டு ஆண்டுக்காலம் மருத்துவக் கலை பயின்ற பிறகு, அந்தத் துறையில் விருப்பமில்லாமல், மாவியல்—விலங்கியல் துறைப் படிப்புக்காக 1828-ல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் சென்றார். 1831-ம் ஆண்டில், பிரிட்டிஷ் அரசாங்கம், கப்பல்கள் தங்குவதற்கான கடற்கரைத் துறைமுகப் பட்டிணங்களைக் கண்டறிவதற்காக, உலகம் முழுவதும் சுற்றிவர, ஒரு கப்பல் குழுவினரைத் தயாரித்தது. அந்தக் கப்பலுக்குப் பெயர் 'தி பீகிள்' (The Beagle) என்று பெயர். அந்தக் கப்பலில் பல அறிவியல் வல்லுநர்கள் தேவையான கருவிகளை உடன் எடுத்துக்கொண்டு புறப்பட்டனர். அந்தக் கப்பலில் சார்லஸ் டார்வின் விலங்கியல் வல்லுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார். டார்வின் ஐந்து ஆண்டுக் காலம் 'தி பீகிள்' என்ற கப்பலில் இடம்விட்டு இடம் பெயர்ந்து உலகம் முழுவதும் சுற்றினார். இந்தச் சுற்றுப்பயணத்தின் விளைவாக, பல்வேறு நாடுகளின் இயற்கை அமைப்பு, அவற்றின் தட்ப-வெட்ப நிலைகள், அவற்றிலுள்ள விலங்குகள் - மரஞ்செடிகொடிகள், கனிப்பொருள்கள், கற்கள் ஆகியவைபற்றிய உண்மைகளையெல்லாம் திரட்டிக்கொள்ளும், வாய்ப்பு டார்வினுக்கு ஏற்பட்டது. உலகச் சுற்றுப் பயணத்தில் டார்வின் பெற்ற அறிவு, 'இயற்கையின் தேர்வு' (Natural Selection) என்ற கோட்பாட்டை உருவாக்கப் பெரிதும் பயன்

மே திங்கள் முதல் நாள்
வெளிவருகிறது

" ஹோம்லண்ட் "

[HOMELAND]

திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் நானிலத்தோர் அறிவதற்கான ஆங்கில வார இதழ்!

ஆசிரியர் :

அறிஞர் C. N. அண்ணாதுரை

தனி இதழ் அணா 2. ஆண்டு சந்தா ரூ. 6.

★ எல்லா ஊர்களிலும் பிரதி ஒன்றுக்கு எட்டு அணா முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் உடனே விண்ணப்பித்துக்கொள்ளவும்.

விபரங்களுக்கு :

எஸ். எஸ். பி. லிங்கம்
உரிமையாளர், " ஹோம்லண்ட் "
6 F, வாரன் ரோடு,
மயிலாப்பூர்...

அட்டைப்பட விளக்கம் :

ஆடம்பரச் சின்னங்கள் அழியட்டும்

ஐரோப்பாக் கண்டத்தில் கி. பி. பதினைந்தாம், பதிணன்காம் நூற்றாண்டுகளுக்கு முன்பு, மதம் எல்லாத் துறைகளிலும் முழு ஆதிக்கம் செலுத்தி வந்தது. அப்பொழுது மதத் தலைவர்களான குருமார்கள் முழு வல்லமையும் மதிப்பும் பெற்றிருந்தார்கள். அவர்கள் இவ்வுலகம், 'மேல் உலகம்' ஆகிய இரண்டினையும் ஆளும் முழு உரிமை தங்களுக்கே உரித்து என்ற முறையில் ஆதிக்கம் செலுத்திவந்தனர்.

மக்கள் அச்சம் காரணமாகவும், ஆசை காரணமாகவும் மதக்குருமார்களுக்கு மண்டியிட்டனர் ; மதக்குருமார்கள் விரும்பியவண்ணமெல்லாம் நடந்துகாட்டுவதே, மதப்பக்திக்கான அடையாளம் என்று கருதினர். 'பாபத்'தைக் கழுவிக்கொள்ளவும், 'பரமபதத்'திற்கான வழியைத் தேடிக்கொள்ளவும், ஓடு ஏந்தும் ஆண்டிமுதல் நாடாளும் அரசன் வரையில், எல்லோரும் குருமார்களின் 'தயவை' நாடிக்கிடந்தனர்.

குருமார்கள் குருகாணிக்கை வாங்குவதன், மூலமும், பாபமன்னிப்புச் சீட்டு விற்பதன்மூலமும், பெரும்பொருள் திரட்டித், தங்கள் வாழ்வை ஆடம்பரமாக்கிக்கொண்டதோடு மட்டுமல்லாமல், தாங்கள் வாழ்ந்துவந்த மடங்களையும், கோயில்களையும் ஆடம்பரமாகக் காட்சியளிக்கவும் செய்தனர். வெள்ளி, பொன், நவமணிகள் ஆகியவைகளால் சிலுவைகள்—கமண்டலங்கள்—ஜெபமாலைகள்—தண்டுகள் — தூபக்கலசங்கள்—குருபீடங்கள்—பல்லக்குகள்—கோப்பைகள்—தட்டுகள் — பெட்டிகள் — படங்கள் போன்ற பொருள்களைச் செய்து கோயில்களையும், மடங்களையும் 'இன்பபுரி'யாக்கிவைத்திருந்தனர். மேலும் ஏசுவின் சிலுவையிலிருந்து சிதறிய மரத்துண்டு, ஏசுவை அறைந்த இரும்பு ஆணி, ஏசுவின் தலைமயிர், ஏசுவின் நகம், மேரி அன்னையின் மார்பில் சுரந்த பால் என்று பல்வேறு அதிசயப் பொருள்களை உற்பத்தியாக்கிக்கொண்டு, அவற்றைக் காட்டிப், பெரும்பாலான மக்களைத் திரட்டிப், பெரும்பொருளைக் காணிக்கையாக ஈட்டவும் முற்பட்டனர்.

ஏசுவின் கொள்கையில் உண்மையான பற்றும், ஆனால் மதக்குருமார்களின் ஆடம்பர வாழ்க்கையில் வெறுப்பும் கொண்ட ஜான் விக்ளிப், ஜான் ஹஸ், மார்டின் லூதர், போன்ற மதச்சீர்திருத்தக்காரர்கள், மதக்குருமார்களின் வெற்றுடம்பரத்தையும், போலித் தன்மையையும் வெட்ட வெளிச்சமாக்கினர். அப்படிப்பட்டவரின் கருத்துக்கள் ஐரோப்பா நாடுகளெங்கும் காட்டுத்தீப்போல் பரவின. மதச் சீர்திருத்தக்காரர்களின் கருத்துக்களை ஏற்றுச், குருமார்களின் கொடுமையை உணர்ந்த பொதுமக்கள், ஆங்காங்கு வெகுண்டெழுந்து, கோயில்களையும், மடாலயங்களையும் சூறையாடி, ஆடம்பரப் பொருள்களை அழித்துக், குருமார்களை விரட்டியடித்தனர். மதக்குருமார்கள் கையிலேந்தியிருந்த பொன்-வெள்ளிச் சிலுவைகள், கமண்டலங்கள், கோப்பைகள், நவமணிகளாலான ஜெபமாலைகள், மடாலயங்களிலே காணப்பட்ட பிற ஆடை அணிகலங்கள், பெட்டிகள், தட்டுகள், படங்கள் போன்ற எல்லாப் பொருள்களையும் வீரர்கள் பிடுங்கி எறிந்திருப்பதும், அவற்றைக் கண்டு மதக்குருமார்கள் கண்கலங்குவதுமே படத்தில் காட்சியாக்கப்பட்டிருக்கின்றன. இது பதினைந்தாம் நூற்றாண்டுக் காட்சிகளிலே ஒன்று. இதனை ஓவியமாகத் தீட்டிக் காட்டியவர் ஜி. காப் என்ற ஓவியராவார். இந்தப் படம் பெர்லின் நகரில் வைத்துக் காப்பாற்றப்படுகிறது.

பட்டது. 'உள்ளது சிறத்தல்' (Evolution) பற்றி டார்வின் கண்டறிந்த கருத்துக்கள், பழைய மதக் கொள்கைகளையெல்லாம் வேரோடு தகர்த்தெறிந்துவிட்டுப், புது உலகத்தை—புரட்சி உலகத்தைக் காண ஏதுவாக இருந்தன. அறிவுப்புரட்சிக்குச் சார்லஸ் டார்வின் ஆற்றிய தொண்டு அளப்பரியது—அவர்தான் அறிவுப்புரட்சிக்குத் தந்தையும் ஆவார்.

கழுத்துப்பட்டி—சோலி

கழுத்துப் பட்டியுடன் அமைந்த சோலி. அதன் விளக்கமே இது. கையின் விளக்கம் 12-ம் இதழில் வெளிவந்ததைப் பார்க்கவும்.

அளவுகள்

இடுப்புவரை நீளம்	14½	அங்குலம்.
பாதித்தோள்	6¼	,,
மார்பு சுற்று அளவு	34	,,
இடுப்பு சுற்று அளவு	28	,,
கழுத்து சுற்று அளவு	13½	,,

பின்பக்கத்தின் விளக்கம்

1-ல் இருந்து 0 வரை 7 அங்.
(¼ மார்பளவில் 1½ அங். குறைவு)
2-ல் இருந்து 0 வரை 15 அங்.
(இடுப்புவரை நீளம் + ½ அங்.)
3-ல் இருந்து 0 வரை 6½ அங்.
(பாதித்தோள் + ¼ அங்.)
4-ல் இருந்து 0 வரை 2¼ அங்.
(1/6 கழுத்து அளவு + ¼ அங்.)
5-ல் இருந்து 0 வரை ¾ ,,
6-ல் இருந்து 3 வரை ½ ,,
7-ல் இருந்து 3 வரை நேர்க்கோடு இணைக்க.
8-ல் இருந்து 7 வரை 3 அங்.
9-ல் இருந்து 1 வரை 9½ அங்.
(¼ மார்பு + 1 அங்.)
10-ல் இருந்து 2 வரை 9½ ,,
11-ல் இருந்து 10 வரை ½ ,,

முன்பக்கத்தின் விளக்கம்

12-ல் இருந்து 13 வரை 7 ,,
(¼ மார்பளவில் 1½ அங். குறைவு)
13-ல் இருந்து 9 வரை 9¼ அங்.
(¼ மார்பு + 1¼ அங்.)
14-ல் இருந்து 12 வரை 15 ,,
(இடுப்புவரை நீளம் + ½ அங்.)
15-ல் இருந்து 14 வரை 9¼ ,,
15-ல் இருந்து ~~10~~ வரை ½ ,,
16-ல் இருந்து 17 வரை 6¾ அங்.
17-ல் இருந்து 18 வரை நேர்க்கோடு இணைக்கவும்.
18-ல் இருந்து 19 வரை 3 அங்.
20-ல் இருந்து 12 வரை 2½ ,,
(1/6 கழுத்தளவு + ¼ அங்.)
(1/6 கழுத்தளவு)
22-ல் இருந்து 14 வரை ½ ,,
(பின்பக்கத்தைவிட முன்பக்கம் ½ அங். நீளம் அதிகம்.)

2, 1, 5, 4, 6, 8, 9, 11, 2 எண்கள் வரை பின்பக்கம் இணைப்பவைகள்.

21, 13, 14, 22, 15, 9, 19, 17, 20, 21 எண்கள் வரை முன்பக்கம் இணைப்பவைகள்.

பின்பக்கம் டார்ட்டு 2, 11 எண்ணுக்கு மத்தியில் அமைக்கவும். அகலம் 1 அங். நீளம் 3½ அங்.

முன்பக்கம் டார்ட்டு 15, 14 எண்ணுக்கு மத்தியில் அமைக்கவும். அலம் 1 அங். நீளம் 3½ அங்.

இடுப்பு சுற்று அளவுடன் + ½ அங். அதிகம் வைத்து இடுப்புப்பட்டி (பால்சன்) ஒரு அங்குலத் துணி திருப்பி தைக்கவும்.

கழுத்துப்பட்டி விளக்கம்

1-ல் இருந்து 0 வரை 2 அங்.
2-ல் இருந்து 0 வரை ½ ,,
3-ல் இருந்து 0 வரை 7¾ ,,
(பாதிக் கழுத்து அளவு + 1 அங்.)
4-ல் இருந்து 3 வரை 2 அங்.
5-ல் இருந்து 4 வரை ¾ ,,
6-ல் இருந்து 3 வரை ½ ,,
(2, 6 எண்கள் வரை படத்தில் உள்ளபடி இணைக்கவும்.)
7-ல் இருந்து 1 வரை 3¾ அங்.
(5, 7, 1 எண்களை இணைக்கவும்)

A, B உள்ள இடத்தில் முன்பக்கம் திறப்பு (ஒப்பன்) அமைக்கவும். விளக்கப்படத்தின் வடிவம் போன்று அமைந்துள்ளனவா என்று ஒத்திட்டுப் பார்த்து வெட்டத்தொடங்கவும்.



மார்ச்
3உ
முதல்
சென்னை
ஸ்ரீ கிருஷ்ண
சித்ரா
ராஜகுமாரி
உமா
லக்ஷ்மி
மற்றும்
தென்னாடெங்கும்
மனோகர் பிக்சர்ஸ்
மனோகரா
டைரக்ஷன
பிரசாத்
தயாரிப்பு
எம்.சோமசுந்தரம்
ஸ்டூடியோ
நெப்ட்யூன்
கதை
நாடகப் பேராசிரியர்
P.சம்பந்த முதலியார்
திரைக் கதை, வசனம்
கலைஞர் மு.கருணாநிதி
RKF
RIGHTS CONTROLLED BY
ராதாகிருஷ்ண பிலிம்ஸ் லிமிடெட் ஆலப்புழை
BAJAN